Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப் பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்

FedEx. Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள் கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாட வேண்டிய
ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumu gan5@lycosmail.com

பலநோக்கு கூ.ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7550
Fax:021 222 7310

மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 புரட்டாதி 07 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 07 (23.09.2004) வியாழக்கிழமை இதழ்:358

மட்டக்களப்பு – வவுணதீவுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற படையினருக்கும் புலிகளுக்குமிடையிலான சந்திப்பின் போது....



# சுமுகமாக நடைபெற்று முடிந்த படையினர் – புலிகள் சந்திப்பு!

## மாதமிருமுறை சந்திக்க இணக்கம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பு ஏற்கனவே திட்டமிட்டபடி நேற்றுக் காலை வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் நடைபெற்றது.**

கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தச் சந்திப்பு நேற்று மீண்டும் நடைபெற்றபோது- இத்தகைய சந்திப்புக்களை மாதம் இரு தடவைகள் மீண்டும் மேற்கொள்வது என இரு தரப்பினருக்குமிடையில் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி இரு தரப்பினரும் மீண்டும் சந்திப்பதற்கான திகதியும் இந்தச் சந்திப்பின் போது தீர்மானிக்கப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ட்றொனட் புறாவ் ஹொவ்டே முன்னிலையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மட்டக்களப்பு தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த மார்ஷல், மட்டு- அம்பாறை மாவட்ட நிர்வாக சேவைப பொறுப்பாளர் தயா மோகன், மட்டு- அம்பாறை மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தைச் சேர்ந்த மனோஜ் ஆகியோரும் -

படைத் தரப்பில் 23 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர குணவர்த்தன, 233 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரி கேணல் லக்சிறீ அமரதுங்க, விசேட அதிரடிப்படை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த ரத்னாயக்க, மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் ஐ.நா.உரை யுத்தஆபத்தை ஏற்படுத்தும்!

### நாடாளுமன்றில் சிவாஜிலிங்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 59ஆவது பொதுச்சபைக் கூட்டத் தொடரில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றிய விதம் நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும் அபாயநிலை உருவாகக்கூடும் என்று தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரிதிருத்த சட்ட மூலவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது -

அமெரிக்காவையும் இந்தியாவையும் தம்பக்கம் இழுத்து அரசாங்கம் யுத்தமொன்றுக்கு தயாராகஇருப்பது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோரின் உயிர்களுக்கு

நான் என் மனதுக்கு நேர்மையாகவும் தூய்மையாகவும் தான்

போது தீர்மானிக்கப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்

அம்பாறை மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தைச் சேர்ந்த மனோஜ்

நான் என் மனதுக்கு நேர்மையாகவும் தூய்மையாகவும் தான் எனது பொறுப்பைச் செய்தேன் . ஆனால் நான் எனது மக்களுக்கு பணியை முழுமையாக்கவில்லை. என்பதையிட்டுப் பெரும் கவலை அடைகிறேன்.

– தியாகி திலீபன்



## ஊர்காவற் படையினரை விடுவிப்பதற்காக

# புலிகள் கேட்பதை கொடுக்க முடியாது!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி

(கொழும்பு)

திருகோணமலையில் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும், இரண்டு ஊர்காவற் படையினரையும் விடுதலை செய்வதற்கு, விடுதலைப் புலிகள் கோருகின்றனர். ஆனால் அவர்கள் கேட்கும் அனைத்தையும் கொடுக்கமுடியாது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி உறுப்பினர் விமல்வீரவன்ச எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் இன்று தேசியப் பிரச்சினையாக மாறியுள்ளது. இரண்டு ஊர்காவற் படையினரையும் விடுவிப்பதற்காக நாடாளுமன்றத்துக்குள்ளும் நோர்வே ஊடாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படவேண்டும் என விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இரண்டு ஊர்காவற் படையினரையும் விடுவிக்க வேண்டுமானால், சிறையிலுள்ள 8 போராளிகளை விடுவிக்குமாறு தமிழீழ (12 ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற்போனோரின் உயிர்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும்!

(கொழும்பு)

யுத்த சூழ்நிலையில் இராணுவத்தினரால் கைதாகி காணாமற்போனவர்களின் உயிர்களுக்கு அரசாங்கம்தான் பொறுப்பேற்கவேண்டும் என கொழும்பு உயர்நீதிமன்றம் வழக்கு விசாரணை ஒன்றின்போது நேற்று அறிவித்தது.

திருகோணமலை லிங்க நகரில் 1994 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது கைதாகிக் காணாமற்போன கணபதிப்பிள்ளை மகேந்திரராஜா மற்றும் அவரது சகோதரர் கணபதிப்பிள்ளை ஜேசுதாசன் ஆகியோர் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கா இதனைத் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்களின் தந்தையான என்.கணபதிப்பிள்ளை இது தொடர்பாகத் தாக்கல்செய்துள்ள மனுவில்,

தனது பிள்ளைகள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனமையால், உயிர் வாழும் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

நீதியரசர்கள், யுத்த சூழ்நிலையில் கைதாகிக் காணாமற் போனவர்களுக்குரிய பொறுப்பை அரசுதான் ஏற்கவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அரச சட்டவாதி - காணாமற்போன சம்பவம் இடம்பெற்று 14 வருடங்களுக்கு மேல் கடந்து போனமையால் இதனை அடிப்படை மனித உரிமை மீறல் எனக் கூற முடியாது.

அப்படியான மனுக்களைத் தாக்கல் செய்வதானால், ஒரு மாத காலத்துக்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும் என வாதிட்டு இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# விசர்நாய் கடிக்குள்ளான யுவதி பரிதாபகரமாக உயிரிழந்தார்!

(யாழ்ப்பாணம்)

விசர்நாய் கடிக்குள்ளான யுவதி ஒருவர் ஒருவார காலத்தின் பின்னர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

சாவகச்சேரி - நுணாவிலைச் சேர்ந்த 18 வயதான சின்னராசா அனித்தா என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

ஒருவாரத்துக்கு முன்னர் விசர்நாய்க் கடிக்கு இலக்கான இந்த யுவதி, அதற்கான தகுந்த மருத்துவ உதவிகளைப் பெறாத காரணத்தால், கடுமையான நோய்க்கு இலக்கான நிலையில் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, (12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

## மாணவர் பேரவையில் திலீபன் நினைவு தினம்

தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று மாலை 3.30 மணிக்கு பேரவையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. பேரவைத் தலைவர் ப.பகீரதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், துணைவேந்தர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் அரசியற்துறையினர் நினைவுரையாற்றவுள்ளனர்.

### சிரமதானம்

தியாகி திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவல கத்தின் பணியாளர்கள் இன்று அலுவலக வளாகத்தில் முழுநேரமாக சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

## சிறு விளம்பரம்

### முகமதி கிறைண்டிங் மில்

வெள்ளைப் பிட்டுக்கலவை, சிவப் புப்பிட்டுக்கலவை, திடீர் தோசைக கலவை, திடீர் அப்பக்கலவை ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன்ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.

(C/3022)

## ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த



அரசாட்சி

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)

(சி-2725)

## நாகம்ஸ் சுன்னாகம்

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

மதுர



தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், நக்மா பார்த்திபன் நடித்த

அரவிந்தன்

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) Return to two moon junction

(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 6.00 (பு.நே)

## சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு!

(யாழ்ப்பாணம்).

யாழ்.குடாநாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் விழா நாளை காலை 10.45 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தவிழாவில் - 2004 ஆம் ஆண்டில் விவசாயச் செய்கையில் சாதனை படைத்த 80 விவசாயிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேற்படி விழாவுக்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், வடக்கு கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் காலநிதி ஞானச்சந்திரன் ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகவும், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொக்டர் பொ.இராமநாதன், கமநல சேவை உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி செ.விஜயரத்தினம் பிரதேச செயலாளர்கள் மற்றும் விவசாயத் துறை சார்ந்தோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஆங்கில ஆசிரியர்களுக்கான மூன்றுநாள் வதிவிடப்பயிற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மூன்றுநாள் வதிவிடப்பயிற்சி, நாளை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இப்பயிற்சி நெறி ஆங்கில மொழிமூலம், விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும் என்ற கருப்பொருளில் இடம்பெறவுள்ளது.இந்தப் பயிற்சிநெறிக்கு தென்மராட்சியைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்களை பாடநூல், கைநூல் என்பவற்றுடன் சமூக மளிக்கும்படி வலயக் கல்விப்பணிப்பளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.(29)

## நாம்பன் கன்றைக் காணவில்லை

இந்த மாதம் 21ஆம் திகதியன்று இரவு 7 மணியளவில் நைலோன் கயிற்றுடன் நாம்பன் கன்று ஒன்றைக் காணவில்லை. இந்தக் கன்று ஐந்து மாதம் உடையது. இதன் உடல் கருமையான மண்ணிறம் உடையதுடன், இதன் தலைப்பகுதியிலும், நடுமுதுகுப் பகுதியிலும் கறுப்பு நிறம் காணப்படுகிறது. இதனைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தந்தால், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P 07776258768

யோ.மரியநாயகம்,
42, மார்ட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

(942)

## கருத்தரங்கு II

காலம் : 25.09.2004 (சனிக்கிழமை)

நேரம் : மு.ப. 9.30 - 12.00

இடம் : TRRO கேட்போர் கூடம்,
106, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

வழங்குபவர் : திருமதி.சுசீலா ராஜா,
(முகாமைத்துவ ஆலோசகர்)

விடயம் : "பெண்களின் உரிமைகளில் புரிந்துகொண்டவையும் புரிந்து கொள்ள வேண்டியவையும்"

குறிப்பு : பெண்கள் தொடர்பாக வேலை செய்வோர், பெண்கள் அபிவிருத்தியில் ஆர்வமுள்ளோருக்கும் மிகவும் பயனுள்ளதான கருத்தரங்கு.



பெண்கள் அபிவிருத்தித் திட்டம்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(c/3187)

## சமுர்த்தி வலயம் நடாத்தும் சர்வதேச எழுத்தறிவு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேசசெயலக யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வலயம்-2 நடத்தும் சர்வதேச எழுத்தறிவு தினம் இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்.பல நோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ்.பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் சொலமன் சூ சிறில் முதன்மை விருந்தினராகவும் -

பிரதேச செயலக கணக்காளர் எஸ்.குகதாசன், உதவித்திட்ட பணிப்பாளர் கே.மகேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## முன்னோடிப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கல்விகற்கும் தரம் 11 மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை இன்று ஆரம்பமாகி 30 ஆம் திகதிவரை அந்தந்தப் பாடசாலைகளில்வலயக்கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார். (29)

## வைத்தியசாலையில் சிரமதானம்

வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையினர் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு மந்திகை ஆதார வைத்தியசாலை எல்லைக்குள் இன்று காலை - தொண்டர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள், முன்பள்ளி ஆசிரியர் கள் இணைந்து சிரமதானப்பணியில் ஈடுபடவுள்ளனர். (12)

## செஞ்சிலுவையுடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

கீழே பெயர் குறிப்பிட்ட நபர்கள் அருகிலுள்ள செஞ்சிலுவைச் சங்கக் காரியாலயத்துடன் (சனி, ஞாயிறு பொதுவிடுமுறை நாட்கள் தவிர்த்து) தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

01. க.தியாகராசா, பண்ணை வீதி, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
02. நாகராசா நவரட்ணராசா, மே/பா. பத்மநாதன், மாகியம்பிட்டி, சண்டிலிப்பாய்.
03. கலாவதி முருகுபிள்ளை மே/பா . விவேகானந்தன், இல.817, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
04. ஆனந்தன் எமல்யா, கரம்பன், ஊர்காவற்றுறை.
05. தம்பிராசா ஸ்ரீஸ்கந்தராசா, உடுத்துறை, வேம்படி, தாளையடி.
06. லக்ஸ்மணன் திலகவதி, துறை (ஜெட்டி), மாதகல்.
07. எஸ்.சந்திரன், மட்டுவில் கிழக்கு, பனிக்கர் வளவடி, சாவகச்சேரி.
08. மரியதாஸ் மேரி திரேசா, இல. 79, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
09. துரைசாமி சுப்பிரமணியம், இல. 16 (34), பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
10. மயில்வாகனம் சுந்தரலிங்கம், ஜே/67, கிராமசேவையாளர் பிரிவு, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
11. சிவயோகம் தயாபரன், நாகம்மாள் கோவிலடி, தங்கோடை, காரைநகர்.
12. தங்கையா பரமேஸ்வரி, ஒட்டுப்புலம், வெதுப்பக வீதி, கோணாவில், கிளிநொச்சி.
13. கந்தப்பு பரம்சோதி, 'புஸ்ப பவனம', தூத்தாவலை, கரணவாய் தெற்கு.
14. டானியல் சந்திரா, சிவன் வீதி, உருத்திரபுரம், கிளிநொச்சி.
15. சந்திரதாஸ் சிவராணி, இல.149, 5 ஆம் குறுக்குத்தெரு, மணியம்தோட்டம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
16. ரவி ராஜேஸ்வரி, மே/பா. துரை, 222/4 தர்மபுரம் மேற்கு, தர்மபுரம்.
17. செல்லர் சாமிநாதன் அன்ரனி, பொக்கணை, புதுக்குடியிருப்பு.
18. கணேசன் சிவகலா, 8 ஆம் கட்டை, குளவீதி, ஆரோக்கியபுரம், அக்கராயன்.
19. ஆனந்தராசா ஆனந்தபவானி, அந்தோனியார் கோவிலடி, கெற்பப்பிளவு, முல்லைத்தீவு.
20. சின்னப்பு தர்மலிங்கராசா, நாகர்கோவில் வடக்கு, நாகர்கோவில்.
21. பவானந்தன் தேவி, பிள்ளையார் கோவில், கருடர் மடு, ஒட்டுசுட்டான்.
22. வி.வி.ராஜேந்திரன், ஆழியவளை உப.தபாலகம், தாளையடி.
23. சேவியர் பிரான்சிஸ்கா, இல.112, மணியந்தோட்டம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
24. ரவீந்திரராஜா தவமணிதேவி, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை அல்லது வட்டுவால் பாலம், முல்லைத்தீவு.
25. எஸ்.தவராஜா, சல்லை, வளலாய், அச்சுவேலி.
26. சுந்தரமூர்த்தி சிறிஸ்கந்தராசா, 7 ஆம் வட்டாரம், சிவநகர் குடிசைத்திட்டம், புதுக்குடியிருப்பு.
27. செல்வராணி அலக்சான்டர், 224, 5 ஆம் பிரிவு, தருமபுரம், கிளிநொச்சி.
28. அப்பாகுட்டி கதிரிப்பிள்ளை நாகராசா, மின்சாரசபை, கிளிநொச்சி.
29. வீரசிங்கம் குலேந்திரன், குடியேற்றம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
30. கணபதிப்பிள்ளை மகேசன், 49, 5 ஆம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சி.
31. சதீஸ்குமார் ஈஸ்வரதேவி, அந்தோனியார் கோவிலடி, மாத்தளன், புதுக்குடியிருப்பு.
32. சதீஸ்குமார் நிவேதினி, காந்திக்கிராமம், கோணாவில், கிளிநொச்சி.
33. அற்புதம் சிறிநந்தினி, மே/பா உதயகுமார் குமரன், 4 ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு.
34. பத்மநாதன் கிருகாம்பாள், விலங்கு விஞ்ஞானப்பிரிவு, விவசாயபீடம், கிளிநொச்சி.
35. மோகனஅகிலன் ஆன் ஜுலியட் நிஷாந்தினி, மே/பா. புனிதம், புனித திரேசா கோவில், கிளிநொச்சி.
36. அருணாசலம் பெருமாள், 24 ஆம் ஒழுங்கை, யூனியன் குளம், கிளிநொச்சி.
37. குணராசா அன்னலட்சுமி, அம்பலப்பெருமாள் சந்தி, அக்கராயன், கிளிநொச்சி.
38. நடராசா சிந்தாமணி, கிருபாதரன் குடியிருப்பு, ஆனைவிழுந்தான், கிளிநொச்சி.
39. க.பிரான்சிஸ், டச்சு வீதி, உடுவில், சுன்னாகம்.
40. சின்னத்துரை பரமேஸ்வரி, நாவலர் பாடசாலை ஒழுங்கை, குமரக்கோட்டம், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
41. யூட் மரிய பிறீடா, கற்குளம் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம் அல்லது தண்ணீர்த் தாங்கி அருகில், ஊர்காவற்றுறை.

## அறிவித்தல்

## கரைச்சி பிரதேசசபை – கிளிநொச்சி

கிளிநொச்சி திருநகர்ப் பகுதியில் பழைய புகையிரத நிலையக் காணியில் பாரவூர்திகள் தவிர்ந்த ஏனைய சிற்றூர்திகள் நிறுத்துவதற்கான வாகனத் தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. ஆகையால், 22.09.2004 ஆம் திகதி முதல் மேற்படி இடத்தில் சகல சிற்றூர்திகளையும் நிறுத்தி விபத்துக்களிலிருந்து பொதுமக்களைக் காப்பதற்கு ஒத்துழைக்குமாறும், இதற்கான பாதுகாப்பு கட்டணமாக ஒரு வாகனத்துக்கு நாளொன்றுக்கு ரூபா 20 அறவிடப்படும் என்பதையும், சகல வாகன உரிமையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

(பொன்.நித்தியானந்தம்)
விசேட ஆணையாளர்,
கரைச்சி பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.2857)

### வாக்களிப்புக் குறித்த

# சட்ட மூலம் அடுத்த மாதம் நாடாளுமன்றில் தாக்கல்!

(கொழும்பு)

வாக்களிப்பதற்கான விசேட ஒழுங்கு சட்டமூலத்தை, அடுத்த மாதம் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு நேற்று இடம்பெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், தேசிய அடையாள அட்டை இல்லாத அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட பின்னர், இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுமாறு கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

அவைத் தலைவர் மைத்திரிபால சிறிசேன, சபாநாயகரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து - அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

நாடாளுமன்றம் காலை கூடிய போது, வாக்களிப்பதற்கான விசேட ஒழுங்கு சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

எனினும், இந்தச் சட்டமூலத்தை நேற்றுமுன்தினம் நிறைவேற்றாமல், கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கமையச் செயற்படுமாறு எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# வரவு - செலவுத் திட்டத்தில் அபிவிருத்திக்கே முதலிடம்!

### திறைசேரிச் செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில், அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக திறைசேரியின் செயலர் டி.பி.ஜெயசுந்தர தெரிவித்தார்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வெளிநாட்டு உதவிகள் மூலமான 800 முதல் 850 மில்லியன் ரூபா வரையிலான நிதி உள்ளடக்கப்படவுள்ளது.

அத்துடன், பொதுமக்களிடம் இருந்து முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை 6.5 வீதத்திலிருந்து 7 முதல் 7.5 வீதமாக உயர்த்த முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

புதிய வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் உயர்ந்த வரி வருமானத்துக்கு வழியேற்படுத்தப்படவுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு பெரும்பாலும் வெளிநாட்டு உதவிகளே பயன்படுத்தப்படவுள்ளன.

இது ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையாகும்.

அரசாங்க ஊழியர்களுக்கு திருப்திப்படக்கூடிய அளவில், வேதன உயர்வு வழங்கப்படுவதற்கு புதிய வரவு - செலவுத் திட்டத்தில் முழுக் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதேவேளை - அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதியே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, ஆளும் கட்சியின் பிரதம கொறடா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் தொடர்ந்து 18 நாட்கள் நடைபெறவுள்ளது. (01)

# அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு ஹெல உறுமய புதிய வேலைத்திட்டம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கைப் பிரிப்பது உட்பட நான்கு கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக, ஜாதிக ஹெல உறுமயவினால் பொதுமக்களிடமிருந்து கையொப்பங்களைத் திரட்டும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை கண்டியில் ஆரம்பமாகவுள்ளது.

வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கூடாது, சோம தேரரின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஆணைக்குழுவை அமைத்தல், தொல்பொருட்களை நாசம் செய்வதை நிறுதததுதல் போன்றவையே அந்தக் கோரிக்கைகளாகும்.

கூட்டமைப்பு அரசு தேர்தலின் போது மக்களுக்கு வாக்களித்தபடி வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவில்லை. அத்துடன், பொதுமக்களால் தாங்கிக்கொள்ள முடியாத வாழ்க்கைச் செலவுகளை அதிகரித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களையும், ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் சம்பிக்க ரணவக்க முன்வைத்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவினால் சமர்ப்பிக்கப்படும் இந்தக் கோரிக்கைகளுக்கு அரசு கூடிய கவனமெடுத்து செயற்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# ஊழல் - மோசடி குற்றச்சாட்டில் பிரதி பொலிஸ் மா அதிபர் கைது

(கொழும்பு)

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் செனவிரத்ன பண்டார, ஊழல் மோசடி குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பொலிஸ் தலைமையகத்தில் குறைகேள் அதிகாரியாக பணியாற்றும் இவர் - தன்வசமுள்ள 35 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்துக்க்ள் தொடர்பான விபரங்களை வெளியிடவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் நீதிபதி குசல சரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் இவர் ஆஜர்படுத்தப்பட்ட போது, குற்றப் புலனாய்வுத்துறையினர் இவருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்போவதாக அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி ரூபா 50 ஆயிரம் ரொக்கம் மற்றும் 1 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செனவிரத்ன பண்டாரவை செல்ல அனுமதித்து, மீண்டும் எதிர்வரும் 24 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அவர் நாட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக, இவரது கடவுச்சீட்டைத் தடுத்துவைக்குமாறும், குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு மற்றுமொரு உத்தரவையும் நீதிபதி பிறப்பித்தார். (01)

# அதிகாரத்தை விரும்புவோராலேயே இனப்பிரச்சினை நீண்டு செல்கிறது!

### அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண

(கொழும்பு)

நாட்டில் ஒரு சிறந்த தலைவர் இல்லை. இதன் காரணத்தால், மக்கள் தமது விருப்பப்படி நடந்து கொள்கின்றனர். இதன் விளைவாக சமாதானம் நிலைபெறவில்லையென தொலைத்தொடர்பு அமைச்சர் டி.எம். ஜெயரட்ண தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் உலக சமாதான தினத்தை முன்னிட்டு, அரசசார்பற்ற... தமது தமிழ் இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், சமாதான விசேட முத்திரை ஒன்றும் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் - இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளில் 10 பேரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் 10 பேரும், ஐக்கிய தேசியக் கட்சியில் 10 பேரும், ஜே.வி.பியில் 5 பேரும் இணைந்து 35 பேரும் மனச்சாட்சிப்படி பேசினால் 24 மணி நேரத்துக்குள் இந்த இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும்.

ஒவ்வொரு தலைவர்களும் உண்மையாகவும், நேர்மையாகவும் சிந்திக்காமல் தமது கௌரவம், பதவி என்பவற்றில் ஆசை கொண்டு செயற்படுகின்றமையால் பிரச்சினை தொடர்ந்த வண்ணமுள்ளது. தமது அதிகாரத்தைப் பயன்படுத்துவதிலேயே சிலர் செயற்படுகின்றனர். இதன் காரணமாகவே பிரச்சினை நீண்டு செல்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

### மன்னார் - திருகோணமலையில்

# புலிகளின் பொலிஸ் நிலையங்கள் புதிதாக அமைக்கப்படவில்லை!

### சபையில் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே



திருகோணமலை - குரங்குபாஞ்சான்குளம், மன்னார், சிலாவத்துறை ஆகிய பிரதேசங்களில், தமிழீழ விடுதலைப் புலிகளின் பொலிஸ் நிலையங்கள் எதுவும் அமைக்கப்படவில்லையென்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாயக்க நாடாளுமன்றில் எழுப்பிய வாய்மூல கேள்வி ஒன்றுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் சார்பில் பதிலளித்துப் பேசிய போதே அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - குரங்குபாஞ்சான் குளத்தில் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்று இயங்கிவருகிறது.

அத்துடன் சிலாவத்துறையில் கடற்புலிகளின் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று உளளூர் குற்றப் புலனாய்வுத் துறையினர் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (01)

# வடக்கு - கிழக்கை கவனிக்க கல்வியமைச்சில் தனிப் பிரிவு!

(கொழும்பு)

இராணுவ கட்டுப்பாடற்ற பகுதி உட்பட வடக்கு - கிழக்கிலுள்ள மாணவர்களின் கல்வித்திறன், பாடசாலை அபிவிருத்தி ஆசிரியர் பற்றாக்குறை, என்பவற்றைக் கண்டறியும் ஜனாதிபதி செயலணிக் குழு மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நிதி குறைவின்றி கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் டொக்டர் தாரா டி மெல் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு கல்வி அபிவிருத்தி தொடர்பாக கவனிக்கவென கல்வியமைச்சில் தனியான பிரிவொன்றும் உருவாக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கில் யுத்தம் காரணமாக கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான பிள்ளைகள் பெற்றோரை இழந்துள்ளனர். வீதிச் சிறுவர்களுக்கு கல்வியைப் பெற்றுக்கொடுக்க கல்வியமைச்சு மேற்கொண்டுவரும் திட்டத்தின்கீழ் இவ்வாறான சிறுவர்களுக்கும் கல்வி பெற்றுக்கொடுக்கப்படும்.

ஜனாதிபதியால் முன்பு உருவாக்கப்பட்டிருந்த இந்தச் செயலணிக் குழு கடந்த 2 வருடங்களாக இயங்கவில்லை.

தற்போது மீண்டும் செப்ரெம்பர் மாதம் இந்தச் செயலணியை ஜனாதிபதி மீண்டும் செயற்படவைத்தார். இதன் முதற் கூட்டம் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றது.

# பொதுச்சந்தை புனரமைப்பு நிகொட் உதவி

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை பொதுச்சந்தையைப் புனரமைப்பு செய்வதற்கு நிகொட் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 3 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதைக் கொண்டு மீன் சந்தையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்த இந்தச் சந்தையின் புனரமைப்புக்கான இத்தத் திட்டத்தின் முதற்கட்டமாக 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் மீன் சந்தையொன்றை அமைப்பது மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகள் என்பன மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (14)

# இடைக்கால நிர்வாகம் வழங்கினால் தனித் தமிழீழ ராஜ்ஜியம் தோன்றுமாம்!

### இந்திய முன்னாள் படையதிகாரி ஹரிகரன்

இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில், விடுதலைப் புலிகளுக்கு 5 வருட ஆட்சி அதிகாரத்தை வழங்கினால், தமிழீழ ராஜ்ஜியம் தோன்றும் வாய்ப்பைத் தவிர்க்கமுடியாது என இந்தியாவின் முன்னாள் படையதிகாரியான கேணல் ஆர்.ஹரிகரன் தெரிவித்திருக்கிறார்.

ஏசியன் ட்ரிபியூன் செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இடைக்கால நிர்வாகசபை யோசனை மூலம் புலிகள் தமது கொள்கைகளின்படி வடக்கு - கிழக்கில் நிர்வாகத்தை நடத்துவார்கள். இதன் மூலம் புலிகளுக்கு தரைப் பகுதி மாத்திரமல்ல ஆகாயத்தையும், கடலையும் நிர்வகிப்பதற்கு அதிகாரம் கிடைக்கும்.

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அமைப்பு யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமானால், திருகோணமலை உட்பட வடக்கு - கிழக்கில் நடைபெற்றுவரும் இந்திய வர்த்தகமும் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் வருவதோடு, விடுதலைப் புலிகளுடன் இந்திய அரசும் நேரடியாக கொடுக்கல் வாங்கல்களை நடத்தும் நிலையும் தோன்றும்.

அத்துடன், புலிகளின் இராணுவப் பிரிவுக்கும், கடற்புலிகளுக்கும் சட்டரீதியான அனுகூலங்கள் ஏற்படும்.

ஏனெனில், புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரைபில் கடற்புலிகளைக் கலைத்துவிடுவது பற்றி குறிப்பிடப்படவில்லை.

அதேபோன்று, வடக்கு - கிழக்கில் 500 கடல் மைல் தூரத்தை நிர்வகிப்பதற்கு புலிகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (தே)

### கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் - இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

# பாக்தாதில் தற்கொலைத் தாக்குதல் பதினான்கு பேர் பலி! 11 பேர் காயம்!!



ஈராக்கின் தலைநகர் பாக்தாதின் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டதுடன், 14 பேர் படுகாயமடைந்தனர்.

தற்கொலைத்தாக்குதல் நடத்தப்பட்ட ஜமியா மாவட்டம் குடியிருப்பு பிரதேசமெனவும், இங்கு வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவில் இடம்பெறுவதெனவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே, இப்பகுதியைக் கிளர்ச்சிவாதிகள் ஏன் தாக்குதலுக்கு தேர்ந்தெடுத்தார்கள் என்பது புரியாமலுள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

பொதுமக்கள் ஐஸ்கிறீம் வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்த பகுதியிலேயே இந்த கார்க்குண்டு தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் தெரிவித்தார். தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திலுள்ள போட்டோ பிரதிசெய்யும் கடையை தாக்குதலாளர்கள் இலக்காக கொண்டிருக்கலாமென ஈராக் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தக் கடையில் இளைஞர்கள் ஈராக் படையில் சேர்வதற்கான நேர்முகத் தேர்விற்கான ஆவணங்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலால் அப்பகுதியில் நின்ற 13 வாகனங்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும், சில வாகனங்கள் ஐம்பது மீற்றருக்கப்பால் தூக்கி வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாக்தாதின் வடகிழக்குப்பகுதியில் சதார் ஆதரவு கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக அமெரிக்கப் படைகள் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். இந்த தாக்குதல் நடவடிக்கையில் சுமார் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன.

அமெரிக்கப்படையினர் சி 130 ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தித் தாக்குதலை நடத்தியதாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இப்பகுதியில் தாக்குதலில் ஈடுபட்ட அமெரிக்க ஹெலிகொப்டர்களில் ஒன்று கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலுக்கிலக்கானதெனவும் - இருந்தபோதிலும், அது உடனடியாகவே அமெரிக்கத் தளத்திற்குத் திரும்பிவிட்டது. அத்துடன் வதியோரமாக இடம்பெற்ற மற்றொரு குண்டு வெடிபபில் அமெரிக்கப் படையின் தாங்கியொன்று பலத்த சேதமடைந்தது.

இந்த நடவடிக்கையின்போது அமெரிக்கப் படையினர் வீட்டின் கூரைமீதேறியவேளையில் ஐந்து ஆயுததாரிகள் இருந்தனரெனவும், அவர்களில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் மூவர் கைதுசெய்யப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது. நாம் பயங்கரவாதிகளுக்கெதிராக தாக்குதலை மேற்கொள்வது இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும், மீளப்புனரமைப்பை மேற்கொள்வதற்காகவுமாகும் இதனையே சதாரின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்களும் விரும்புகின்றார்கள் என அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.



அமெரிக்கா சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் - நியூயோர்க்கிலுள்ள ஹோட்டல் ஒன்றில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம்.



நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தை, அமைதிமணியை ஒலித்து செயலர் கொபி அனான் ஆரம்பித்துவைக்கும் காட்சி. 50 ஆண்டுகளுக்கு முன் இந்த மணியை ஜப்பான், ஐ.நா சபைக்கு அன்பளிப்பாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# இன்னொரு அமெரிக்கப் பிரஜையும் ஈராக்கில் சிரச்சேதம் செய்யப்பட்டார்!



(பாக்தாத்)

இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளால் ஈராக்கில் வைத்துக் கடத்தப்பட்ட அமெரிக்கப் பிரஜைகளில் இரண்டாவது நபரான ஜக் ஹென்ஸலியும் நேற்றுமுன்தினம் கொல்லப்பட்டுவிட்டதாக இஸ்லாமிய இணையத்தளம் மூலம் கிளர்ச்சிவாதிகள் அறிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட ஒருவரது சடலம் உருக்குலைந்த நிலையில் பாக்தாத்திலுள்ள ஓரிடத்தில் மீட்கப்பட்டதாகவும் - ஆனால், அது ஹென்ஸினுடையதுதானா என்பதனை உறுதிப்படுத்தமுடியவில்லை என செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை சிறையிலுள்ள இரண்டு பெண் விஞ்ஞானிகளில் ஒருவர் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக ஈராக்கின் நீதிய மைச்சு தெரிவித்துள்ளது. ஆனாலும் இவர் விடுதலை செய்யப்படுவதற்கும், கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட அமெரிக்க மற்றும் பிரிட்டன் பிரஜைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனவும் நீதிய மைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால், தம்மால் இரண்டு பெண்களே சிறைப்பிடிக்கப்பட்டதாகவும், அவர்களையும் விடுதலை செய்யும் நோக்கமெதுவும் தமக்கு இல்லையெனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. பெண் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக எந்த அதிகார மட்டத்திலிருந்தும் தகவல் எதுவும் கிடைக்கவில்லையென பிரிட்டன் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்தப் பெண்களை விடுதலை செய்வது தொடர்பாக நிச்சயமற்ற தன்மை நிலவுவதாகவும், இவரது விடுதலைக்கு ஈராக் பிரதமர் அல்லாவி, ஜனாதிபதியின் ஒப்புதல் தேவையென ஈராக்கின் உப ஜனாதிபதியின் பேச்சாளர் அட்னான் அலி தெரிவித்தார்.

## உலக நோக்கு

# ஈராக்கின் 18 தேசிய படையினர் கிளர்ச்சிவாதிகளால் கடத்தல்!

(பாக்தாத்)

ஈராக்கின் தேசியப் படையைச் சேர்ந்த 18 பேரை முகம்மது பின் அப்துல்லா என்ற அமைப்பு கடத்திச்சென்றுள்ளது. கடத்தப்பட்ட 18 பேரின் தலைக்கு நேரே துப்பாக்கியை வைத்தவாறு அப்துல்லா என்ற அமைப்பின் உறுப்பினர்கள் நிற்பது போன்ற வீடியோ ஒளிநாடாவை அல் ஜசீரா தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

சிறைவைத்துள்ள ஷியா முஸ்லிம் தலைவரை விடுதலை செய்யாவிட்டால் 18 பேரையும் கொலை செய்யப்போவதாக அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. எனினும் இநத வடியோ நாடா உண்மையானதா என்பது இன்னும் உறுதியாகவில்லை என்று ஈராக்கின் அதிகாரிகள் தெரிவித்தனர்

# முஷாரப்பின் தலைமையில் மட்டுமே— பாகிஸ்தானில் தீவிரவாதத்தை முற்றாக ஒழிக்கமுடியுமாம்!

என் தலைமையில் பாகிஸ்தான் இருந்தால் மட்டுமே தீவிரவாதத்தை முற்றாக ஒழிக்கமுடியும் என ஜனாதிபதி முஷாரப் கூறியிருக்கிறார். அமெரிக்கா சென்றிருக்கும் முஷாரப் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது -

நான் ஜனாதிபதியாகவும், இராணுவத் தளபதியாகவும் இருந்தால் மட்டுமே பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதத்தை விரட்டமுடியும். இந்த ஆண்டு இறுதியில் இராணுவத் தளபதி பதவியை இராஜினாமாச் செய்தால் தீவிரவாதம் மீண்டும் தலைதூக்கிவிடும். தேசிய எழுச்சி காணாமற்போய்விடும்.

அணு ஆயுதத் தொழில்நுட்பத்தை மற்ற நாடுகளுக்குத் திருட்டுத்தனமாக விற்ற பாகிஸ்தான் உயர் விஞ்ஞானியின் கட்டமைப்பை உடைத்தெறிவதில் நான் வெற்றிகண்டேன். அவரது கட்டமைப்பின் முழுவீச்சு என்ன என்பது இன்னும் அறியப்படாமல் இருக்கிறது.

டிசம்பர் 31 ஆம் திகதிக்குப் பிறகு இராணுவத் தளபதி பதவியை உதறிவிட்டு ஜனாதிபதி பதவியில் நீடிப்பேன் என்று நான் கூறியது உண்மை.தான். ஜனநாயகப் பாதைககுப் பாகிஸ்தானைத் திருப்பவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் நான் உறுதிமொழி அளித்தேன். ஆனால், இப்போதுள்ள பிரச்சினை அதைவிடப் பெரியது.

600 அல்கொய்டா தீவிரவாதிகளைக் கைதுசெய்திருக்கிறோம். பெரும் நகரங்களில் திருட்டுத்தனமாக நிதிதிரட்டுவதை முடிவுககுக் கொண்டுவந்து உள்ளோம். எல்லையோரப் பகுதிகளில் அமைக்கப்பட்ட தீவிரவாத முகாம்களைத் தகர்த்திருக்கிறோம். இந்த முயற்சிகள் இன்னும் முழுமை அடையவில்லை. தொடர்ச்சியாக்கக் கையாள வேண்டிய முயற்சிகள் இவை.

தீவிரவாதத்தையும், மதவாதத்தையும் நோக்கி நகர்ந்த ஒரு சமுதாயததைத் திருப்பிவிட்டு மிதவாதிகளான பெரும்பான்மைப் பாகிஸ்தானியர்களுக்குக் குரல்கொடுக்க நான் முயற்சி செய்துவருகிறேன்.

ஜனநாயகத்தின் பலன்களை ஏறகனவே நாடு அனுபவிக்கத் தொடங்கிவிட்டது. ஊராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. நாடாளுமன்றம் ஆகியவை முழுமூச்சாகச் செயற்பட்டுவருகின்றன. பேச்சுரிமை இருக்கிறது. பத்திரிகைகள் சுதந்திரமாகச் செயற்பட்டு வருகின்றன.

பாகிஸ்தானில் பெரியளவில் மறுமலர்ச்சியையும், பெரிய மாற்றத்தையும் கொண்டுவர நான் முயற்சிசெய்து வருகிறேன. தீவரவாதம் தலைதூக்குவதற்குக் காரணம் அரசியல் தகராறும் வறுமையுந்தான். அதைக்களையமுற்படாவிட்டால் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவுக்குத்



தோல்விகிடைக்கும்.

நாம் இப்போது இராணுவ ரீதியாகத் தீவரவாதத்தை எதிர்த்துப் போரிட்டுவருகிறோம். அதன்மூல காரணங்களை அகற்ற நாம் பாடுபடவில்லை.

அரசியல் தகராறுக்கு நல்ல உதாரணம் பலஸ்தீனப் பிரச்சினை. முஸ்லிம் மக்களிடம் பலஸ்தீனத்துக்கு நிறைய அனுதாபம் உள்ளது. இந்தப் பிரச்சினையில் முஸ்லிம்களுக்கு எதிராக அமெரிக்கா இருப்பதாக முஸ்லிம் மக்களிடம் ஒருவித எண்ணம உள்ளது. இதற்கு உடனடித தீர்வுகாணப்படவேண்டும் எனவும் முஷாரப் கூறினார்.

# 'ஏ.கே – 47 புகழ்' காலஸ்னிகோவின் புதிய பயங்கர 'ஆயுதம்' அறிமுகம்!

(மொஸ்கோ)

புகழ்பெற்ற ஏ.கே.47 ரக துப்பாக்கியைக் கண்டுபிடித்த மிகைல் காலஸ்னிகோவ், மனிதர்களை ஆட்டிப்படைக்ககூடிய மற்றொரு ஆயுதத்தைக் கண்டுபிடித்துள்ளார்.

துப்பாக்கி என்றாலே நினைவுக்கு வருவது ஏ:கே.47. தான். இதைக் கண்டுபிடித்தவர் ரஷ்யாவின் மிகைல் காலஸ்னிகோவ். இரண்டாம் உலகப்போரின்போது ஜேர்மனி வீரர்களால் இவர் சுடப்பட்டார். அப்போது ஏற்பட்ட வெறியால அதிநவீன துப்பாக்கியைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சயில் ஈடுபட்டார். அதில் உருவானது தான் ஏ.கே.47. உலகத்தில் சிறிய, பெரிய நாடுகளின இராணுவம் முதல் தீவிரவாதிகள் வரை ஏ.கே.47 இல்லாத இட மில்லை.

ஏ.கே.47 ஐ விட மனிதர்களை ஆட்டிப்படைக்கக்கூடிய பயங்கர ஆயுதத்தை காலஸ்னிகோவ் தற்போது கண்டுபிடித்துள்ளார். லண்டனில் நேற்றுமுன்தினம் அந்த ஆயுதம் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. புதிய கண்டு பிடிப்பு பற்றி காலஸ்னிகோவ் அளித்த பேட்டி-

ஏ.கே.47 கண்டுபிடிப்பின் மூலம் எனக்குக் கிடைத்த நற்பெயரைத் தொடர்ந்து காப்பாற்ற விரும்புகிறேன். மேலும் பல நல்ல காரியங்களை செய்வதன்மூலம் எனது ஆயுதத்துக்கு கிடைத்த நற்பெயரை மேலும் விரிவுபடுத்த நினைக்கிறேன். என்னுடைய நாட்டின் எல்லைகளைக் காக்கவேண்டும் என்ற தேசபக்தியல்தான் ஏ.கே 47 ஐக் கண்டுபித்தேன். ஆனால், கெரிலாக்கள் முதல் தாதாக்கள்வரை எல்லோருடைய விருப்பமான ஆயுதமாக அது மாறிவிட்டது. உலகம் முழுவதும் ஏ.கே.47 பரவியது என்னுடைய தவறில்லை. அதனுடைய நம்பகத்தன்மை அப்படி.

தற்போது என்னுடைய பெயரில் புதிய கண்டுப்பிடிப்பை அறிமுகம் செய்துளளேன். ரஷ்யாவில் விளைந்த தானியங்களையும், செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் உள்ள லடோகா ஏரியின் தண்ணீரையும் பயன்படுத்தி இது தயாரிக்கப்படுகிறது. நண்பர்களோடு இதைச் சேர்ந்து அடித்தால் உற்சாகமாக இருக்கும். இவ்வாறு காலஸ்னிகோவ் கூறினார்.

அவர் கண்டுபிடித்துள்ள புதிய ஆயுதம 'காலஸ்னிகோவ் வோட்கா' ரஷ்யாவின் புகழ்பெற்ற மதுபானங்களில் ஒன்று வோட்கா. பிரிட்டன், ரஷ்யாவில் இதுவரை வந்த வோட்கா ரகங்கள் எல்லாவற்றையும் 'காலஸ்னிகோவ் வோட்கா' தூக்கிச் சாப்பிட்டு விடும்.

# இடைக்கால நிர்வாக யோசனையை சிங்கள ஊடகங்களே திரிபுபடுத்துகின்றன

## யாழ். அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இடைக்கால நிர்வாக யோசனையைப் பிரச்சினைக்குரியதாகக் காட்டுவதில், தென்னிலங்கைச் சிங்கள ஊடகங்களே மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றன என்று, யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் ஸ்ரீ சக்திவேல் தெரிவித்தார்.

குருநாகலிலிருந்து வருகை தந்த மாற்றுக் கொள்கைகளுக்கான, அமைப்புடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உரையாற்றிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனை என்பது, சாதாரண மாக யுத்தம் நடைபெற்ற நாடுகளில் போரா ட்டம் நடத்திய குழுக்களிடம் வழ ங்குவதைப் போன்றதே.

இவ்வாறு இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதன் மூலம் நாட்டில் நிரந்தரமான பிரிவு எதுவும் ஏற்படமாட்டாது, தொடர்ச்சியானதாகவும் இந்தத் திட்டம் இருக்காது.

ஆனால், சில ஊடகங்கள் குறிப்பாக- சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இந்த இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை, புலிகளிடம் நாட்டை வழங்க வகுத்த திட்டம் என்றும், நாட்டைப் பிரிக்க வகுத்த திட்டம் என்றும் பிரசாரப்படுத்துகின்றன. இது தவறு. தமிழீழ விடுதலைப் புலிகள் சில கட்டமைப்புக்களை உருவாக்கவே இந்த யோசனையை முன்வைத்துள்ளனர்.

இதனை தென்னிலங்கையில் இருந்து இங்கு வந்துசெல்லும் நீங்கள் தெளிவாக விளங்கிக்கொண்டு, உங்கள் பகுதிகளில் உள்ளவர்களுக்கு விளக்கவேண்டும். அதுவே நீங்கள் உங்களது நாட்டுக்குச் செய்யும் பொறுப்பு வாய்ந்த கடமையாகும் என்றார்.

இந்தச் சந்திப்பில் குருநாகலிலிருந்து வருகை தந்த ரஞ்சினி மொறகொட தலைமையிலான 30 பேர் அடங்கிய குழு கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ப)

# பிரதேச செயலக கட்டடப்பணி பாதியில் இடைநிறுத்தம்!

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கென "நீர்ப்" திட்டத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட புதிய கட்டப்பணிகள் பாதியில் இடைநிறுத்தப்பட்டுள்ளமை மக்கள் மத்தியிலும், பிரதேச செயலக ஊழியர்கள் மத்தியிலும் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது தனியாருக்குச் சொந்தமான இரு வீடுகளில் பெரும் இடநெருக்கடிக்கு மத்தியில் இந்தச் செயலகம் இயங்கி வருகின்றது. புதிய கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் இன்னும் பாதிவேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது செயலகம் இயங்கும் வீட்டின் கூரையில் ஏற்பட்ட ஒழுக்குக் காரணமாக மழை காலங்களில் அலுவலகத்தினுள் நீர் தேங்குவதனாலும், அலுவலர்கள் ஈர நிலத்தில் இருந்தே சிரமத்துடன் பணியாற்ற வேண்டியுள்ளமையும், குடிசை வீடுகளைப் போல மழை நேரங்களில் ஒழுக்குகளுக்கு வாளிவைத்து ஏந்துவதையும் காணமுடிகின்றது. (24)



கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலய வருடாந்த திருவிழா முடிவில் அன்னையின் திருச்சுருபம் சுற்றுப் பிரகார பவனியாக எடுத்துச் செல்வதைக் காணலாம். (21)

# கடல்வள தொழில்நுட்ப பாடத்திற்கு ஆசிரியர்களை நியமிக்க கோரிக்கை

வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் கடல்வளத் தொழில்நுட்பப் பாடத்துக்குக் கூடுதலான ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறுகோரி, நீர் உயிர்வள ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

யாழ். பல்கலைக்கழகத்தின் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்திசெய்த 200 இற்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர். இவர்களில் 50 பேர் தற்காலிக நியமன அடிப்படையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள 69 பாடசாலைகளில் பணியாற்றி வருகின்றனர். இதனால் கடந்த ஆண்டு சாதாரண பரீட்சையில் 700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றி, சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் ஏனைய பாடசாலைகளிலும் இந்தப் பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்வந்துள்ள போதிலும், ஆசிரிய ஆளணிப்பற்றாக்குறை காரணமாகக் கற்பித்தல் செயற்பாடுகளை விரிவாக்க முடியாமல் இருக்கிறது. மேலும் நியமனம் தொடர்பாக நிச்சயமற்ற நிலை தொடர்வதால், தற்போதைய கற்பித்தல் பணிகளும் ஸ்தம்பித நிலைக்குச் செல்லலாம். இதனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்புறும். இதனைக் கருத்திற்கொண்டு வடக்கு - கிழக்கு கடல்வள தொழில்நுட்ப பாடத்துக்குக் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (17)

## சந்தேகத்துக்கிடமாக

# நள்ளிரவில் நடமாடிய பெண் பொலிஸாரால் கைதானார்!

நள்ளிரவுவேளை யாழ். நகர்ப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளம்பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் உரும்பிராய் மகாபுரத்தைச் சேர்ந்தவர் என்றும், இவருக்கு வயது 20 என்றும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ். பஸ் நிலையப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியபோது, ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் குறித்த பெண்ணைக் கைதுசெய்து நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர்செய்தவேளை, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

# மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை நாளை முதல் புதிய கட்டடத்தில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை நாளை முதல் புதிய கட்டடத்தில் தனது பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளவுள்ளதாக நிகொட் நிறுவனத்தின் யாழ். மாவட்ட திட்டமிடல் அதிகாரி க.நவரத்தினராஜா தெரிவித்தார்.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு, பெரும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது. இதற்கு நிகொட் நிறுவனம் ஒரு கோடி 70 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கி, புனர்நிர்மாணப்பணிகளைக் கடந்த ஆண்டு முதல் மேற்கொண்டு வந்தது.

அதன் பயனாக, தற்போது அந்த வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதனால், நாளை இந்த வைத்தியசாலையை யாழ். மாவட்ட நிகொட் நிறுவன அதிகாரிகளும், மாகாணக் கட்டடத்திணைக்கள அதிகாரிகளும் இணைந்து மாகாண சுகாதார திட்டப்பணிப்பாளரிடம் ஒப்படைக்கவுள்ளனர்.

இங்கு புதிதாக வெளி நோயாளர் பகுதி, ஆண், பெண் நோயாளர் விடுதிகள், மகப்பேற்று நிலையம், சமையலறை, வைத்தியர் விடுதி, தாதியர் விடுதி முதலானவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட மேலும் ஒரு மில்லியன் ரூபா செலவில் நீர் விநியோகம், வீதி புனரமைப்பு என்பன அங்கு மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் நிகொட் திட்டப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ப)



கரவெட்டிப் பிரதேச நவோதயப் பாடசாலையான கரவெட்டி திரு இருதயக்கல்லூரி நவோதய வார இறுதி நாள் கண்காட்சியை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே. அம்பலவாணர் பார்வையிடுகிறார். அவருக்கருகில் அதிபர் ரீ.எவ். மனோகரன், உப அதிபர், ஆசிரியர் ஆகியோரும் காணப்படுகின்றனர். (13)

# உலக சமாதான தினத்தில் மதுபானம் விற்றவர் கைது!

(யாழ்ப்பாணம்)

உலக சமாதான தினமாகிய நேற்றுமுன்தினம் யாழ். நகரில் மதுபான வியாபாரம் செய்த மதுபானக் கடை உரிமையாளர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

உலக சமாதான தினமாகிய நேற்றுமுன்தினம் அனைத்து மதுபானசாலைகளையும் மூடிவிடுமாறு ஏற்கனவே உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும், நகரப் பகுதியிலுள்ள மதுபானசாலை ஒன்றில் திருட்டுத்தனமாக மதுபானம் விற்பனை செய்யப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, குறிப்பிட்ட மதுபானசாலைக்குச் சென்ற பொலிஸார் உரிமையாளரைக் கைதுசெய்ததுடன், விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மதுபானப் போத்தல்களையும் கைப்பற்றிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# முகமாலையில் கைதானவர் யாழ். சிறைச்சாலையில்!

மூன்று அடையாள அட்டைகள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கைதுசெய்யப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஊழியர் ஒருவர் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்ட குறிப்பிட்ட ஊழியர் வேறு இருவரின் அடையாள அட்டைகளைத் தனது உடமையில் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

ஆனால், தனது அலுவலகத்தில் கடமையாற்றும் இரு சிற்றூழியர்களது அடையாள அட்டைகளையே தாம் வேறு ஒரு தேவைக்காக எடுத்துச் சென்றதாகக் குறிப்பிட்ட ஊழியர் தெரிவித்தார்.

எனினும், கைதுசெய்யப்பட்ட ஊழியர் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வேளையில், அவரை யாழ். சிறையில் தடுத்து வைக்கும்படி, சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தவிட்டார்.

## இடி தாக்கியது

நீர்வேலி அரச சேகரிபிள்ளையார் கோவிலுக்குப் பின்புறமுள்ள தோட்ட காணியில் நேற்றுமுன்தினம் இடிமின்னல் தாக்கி, ஒரு தென்னை மரம் தீப்பற்றி எரிந்ததுடன், அதனைச் சுற்றியுள்ள வீடுகளில் பாவனையில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் பலவும் செயல் இழந்து விட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (64)

## விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு

யாழ். மாவட்டத்தில சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை காலை 10.45 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். சின்னத்துரை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் விவசாயப்பணியாளர் சி.ஞானச்சந்திரன் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## உறக்கத்திலிருந்தவரிடம் சங்கிலி அபகரிப்பு

யாழ். நாச்சிமார் கோயில் பூசகர் வீட்டுக்குள் நுழைந்த திருடர், உறக்கத்திலிருந்தவரிடம் 3 பவுண் எடையுள்ள சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இது சம்பந்தமான முறைப்பாடொன்றை அவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் செய்திருந்ததாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது -

கடந்த சனிக்கிழமை இரவு பூசகர் ஆழ்ந்த நித்திரையில் இருந்த வேளை சிறிய இடைவெளியூடாக சிறுவன் ஒருவனை உள்ளே விட்டுக் கதவுகளைத் திறந்துவைத்துக் கொண்டே திருடன் அவரது கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (206)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : நா.தமிழ்க்கவி
முகவரி : 43/1 மணல்தறை லேன், கந்தர்மடம்.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : வெ.சிந்துஜன்
முகவரி : 'ரதிமஹால்' அல்வாய்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்




# தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு

# தென்னைமரங்களுக்கு உரமிடும் முறைகள்



எமது பிரதேசத்தில் மழைகாலம் ஆரம்பித்துவிட்டது. இந்தவேளையில் இளம், முதிர் தென்னைகளுக்கு சேதன அல்லது அசேதனப் பசளையிடுவது வளர்ச்சியையும், விளைவையும் கூட்டுவதற்கு ஏதுவாக அமைகின்றது. எனவே, டிசம்பர் மாதம் முடிவதற்கு முன்னர் - தென்னைச் செய்கையாளர்கள் சேதன உரமாக மாட்டெரு, ஆட்டெரு, கோழி எரு, கிளிசீறியா இலை அல்லது இப்பில் இப்பில் இலைகளையும், அசேதன உரமாக - இளம் கன்றுக் கலவை **Young Palm Mixture - Y.P.M.** (அமோனியா - 500 கிராம், **T.S.P** 200 கிராம், மியூரியற் ஒவ் பொட்டாஸ் - 300 கிராம்), முதிர்மரக் கலவையையும், **Adult Palm Mixture - A.P.M.** (அமோனியா 1 1/2 கிலோ, **T.S.P** - 1/4 கிலோ, மியூரி யற் ஒவ் பொட்டாஸ் 1 1/4 கிலோ) பாவிக்கலாம். சிபார்சு செய்யப்பட்ட உரக்கலவைகள் நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய மூன்று தாவர போசனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

**தென்னைகளுக்கு சேதனப் பசளையிடல் முறை**

பாளை வந்த தென்னை மரங்கள் ஒவ்வொன்றுக்கும் - உலர் மாட்டெரு 30 கிலோவும், அத்துடன் 400 கிராம் சப்போஸ் பொஸ்பேற்றும், 1 கிலோ மியூரியற் ஒவ் பொட்டாசும் கலந்து - அடி மரத்திலிருந்து 3 அடி தூரததில், 3 அடி அகலமாக (அடி மரத்திலிருந்து 6 அடி உட்பட்டதாக) அரை அடி ஆழத்துக்கு மட்டும் சுற்றி வர குழிவெட்டி, அதற்குள் மேற்குறிப்பிட்ட கலவையை இடுதல்வேண்டும். பின்பு இதனை மண்ணால் மூடி, பசளை வட்டத்துக்குள் தென் னோலை அல்லது பனையோலையால் மூடி, பத் திரக் கலவையாக்கி விடலாம்.

**மாடுகளைத் தென்னைமரத்தில் கட்டுதல்**

தென்னையின் அடி மரத்திலிருந்து 3 அடி தூரம் தள்ளி, 3 அடி அகலமாக அரை அடி ஆழத்துக்கு குழியாக வெட்டி, பசளைப் பாத்தி அமைக்க வேண்டும். பின்பு இரு மாடுகளை 10 இரவுகளுக்கு தொடர்ந்து ஒரு மரத்தில் கட்டவேண்டும். கட்டும்போது, எல்லா கழிவுகளும் பசளைப் பாத்திக்குள் உறுதிப்படுத்தத்தக்க வகையில் மாடுகள் கட்டப்படல்வேண்டும். (6 அடி நீளத்துக்கு மேற்பட்ட கயிற்றால் பிணைத்தால் எதுவித பிரயோசனமுமில்லை.

இந்தக் காலத்தின் பின்பு, 200 கிராம் சப்போஸ் பொஸ்பேற்றும், 750 கிராம் மியூரியற் ஒவ் பொட்டாசும் பாத்திக்குள் விசிறப்பட்டு, மண்ணால் மூடி விடுதல் வேண்டும் இம்முறையை வருடத்தில் மழை காலத்தில் ஒருமுறை செய்தால் போதுமானது.



**இளம் தென்னங்கன்றுகள், முதிர் தென்னைகளுக்கு செயற்கை உரம் இடும் முறை**

தென்னைகளில் நைதரசன் பற்றாக்குறையால், எல்லா ஓலைகளும் வெளிறிய பச்சையாகத் தோற்றமளிக்கும். பின்பு, மஞ்சள் நிறமாகத் தோற்றமளித்து, பின்பு சிவப்பு கலந்த நரை நிறமாக மாறுகின்றது. இறுதியாக வட்டு படிப் படியாக சிறியதாகும்.

பொட்டாசியம் குறைபாட்டால், இந்த நிலையின் நடு நரம்பில் (ஈர்க்கில்) இரு பக்கங்களிலும் சிறிய புள்ளிகள் பரவலாகக் காணப் படும்.

எனவே, வை.பி.எம், ஏ.பி.எம் உரங்களை வருடா வருடம் தென்னைகளுக்கு இடுவதால், மேற் குறிப்பிட்ட பற்றாக்குறை காணப்படாது. வளர்ச்சியையும் பக்க விளைவையும். அதிகரிக்கச் செய்யலாம்.

**இளம் கன்றுகளுக்கு (இளம் மரககன்று) வை.பி.எம் உரம் இடுதல் முறை**

சாதாரணமாக 5 வருடங்களுக்கு உட்பட்ட, பாளை வராத தென்னைகளுக்கு வை.பி.எம் என்ற உரத்தை 6 மாதங்களுக்கு ஒருதடவை - 500 கிராமிலிருந்து, 5 வயதுடைய தென்னைகளுக்கு (பாளை வராத) 1 1/2 கிலோ வரை படிப்படியாக அதிகரித்து உரப்பிரயோகம் செய்யலாம்.

தென்னையின் அடியிலிருந்து 1/2 அடி தூரம் தள்ளி, பசளை வட்டத்தின் அதாவது - மண்ணை சாதாரணமாக 1/2 அடி ஆழம்வரை கொத்திப் புரட்டி, ஏற்படுத்தப்பட்ட சுற்றுவட்டத்தை படிப் படியாக அதிகரித்து, பாளை வரும் நேரத்தில் 6 அடியாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும். இப்படிக் கொத்திப் புரட்டிய பின்பு அதற்குள் தெனனையின் வயதுக்கேற்ப வை.பி.எம் உரத்தை இடலாம். உரமிட்ட பகுதிக்கு மேலாக காய்ந்த தென்னோலை அல்லது பனை ஓலையால் மூடிவிடலாம்.

**முதிர்ந்த தென்னைகளுக்கு ஏ.பி.எம் உரமிடுதல் முறை**

மர அடியிலிருந்து 6 அடி தூரத்துகக்கு மரத்தைச் சுற்றியுள்ள முழு நிலப் பரப்பளவையும் 1/2 அடி ஆழத்துக்கு கொத்திப் புரட்டிய பின்பு, 6 அடியில் வரம்பு ஒன்றை சுற்றிவரக் கட்டிவிட்டு, 6 அடி சுற்றுவட்டப் பரப்பளவு முழுவதற்கும் 3 கிலோ ஏ.பி.எம் உரத்தை தூவி மண்ணுடன் கலந்து விடலாம்.

மரத்தைச் சுற்றி எக்காரணம் கொண்டும் குழிவெட்டி உரத்தைப் போடக்கூடாது. களைகள் இருப்பின் களைகளை அகற்றிய பின்பு இந்தச் செயல்முறையை மேற்கொள்ள வேண்டும். பின்பு பசளை வட்டத்தை தென்னோலை அல்லது பனையோலையால் மூடி விடலாம். இப்படி வருடா வருடம் ஒரு தடவை உரப்பிரயோகம் செய்தால், தேங்காயின் விளைச்சலை அதிகரிக்கச் செய்யலாம்.

எனவே, தென்னைகளுக்கு உரமிடுதல், ஈரப்பதனைக் காக்க தென்னைகளுக்கிடையில் பொச்சுமட்டைக் கழிவுகளை வெட்டுதல் போன்ற ஆலோசனைகளுக்கும், தென்னைச் செய்கையாளர்கள் -நல்லூர், கமநல சேவை நிலையக் கட்டடத்தில் இயங்கும் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரனிடம் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு, ஏ.பி.எம், வை.பி.எம் உரவகைகளையும், நல்லின 3 வருடம், 5 வருடத்தில் காய்க்கக்கூடிய தென்னங்கன்றுகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.




| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 10/= | 20/= | 25/= | 10/= | 20/= | 20/= | 12/= |
| வெண்டிக்காய் | 10/= | 20/= | 30/= | 10/= | 20/= | 20/= | 25/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 60/= | 60/= | 80/= | 70/= | 70/= | 70/= |
| கத்தரிக்காய் | 30/= | 25/= | 40/= | 30/= | 30/= | 40/= | 30/= |
| பாகற்காய் | 20/= | 25/= | 30/= | 40/= | 30/= | 40/= | 30/= |
| கரட் | 40/= | 35/= | 40/= | 30/= | 40/= | 50/= | 40/= |
| பீற்றூட் | 20/= | 20/= | 30/= | 20/= | 20/= | 20/= | 20/= |
| முருங்கைக்காய் | 60/= | 40/= | 50/= | 40/= | 60/= | 100/= | 50/= |
| வெங்காயம் | 30/= | 30/= | 35/= | 30/= | 25/= | 35/= | 40/= |
| பச்சை மிளகாய் | 30/= | 30/= | 40/= | 30/= | 30/= | 40/= | 30/= |

## மிளகாய் செய்கை

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

**உரம் பாவித்தல்**

விளைச்சலுக்குரிய மண்ணில் காபனிக் உரம் இருந்தால், சிறந்த விளைச்சலைப் பெற முடியும். கன்றுகளை முளைக்க வைப்பதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னர் கீழ்வரும் இரசாயன உரக் கலவையை மண்ணுடன் கலக்கவேண்டும்.

**1. 40 கிலோகிராம் ட்ரிபல் சுபர் பொஸபேட்.**
**2. 20 கிலோகிராம் மியுரியெட் ஒப் பொட்டாஸ்.**

மிளகாய் கன்றுகளை முளைக்க வைத்து இரு வாரங்களுக்குள் - 25 கிலோகிராம் யூரியா போடவேண்டும். பின்னர், மீண்டும் இரு வாரங்களில் 25 கிலோகிராம் யூரியா போடவேண்டும்.

இரசாயன உரம் பாவிக்கும்போது கன்று இருக்கும் இடத்திலிருந்து 15 சென்ரிமீற்றர் தூரத்தில் போடவேண்டும்.

8 வாரங்களின் பின்னர் 25 கிலோகிராம் யூரியாவும், 20 கிலோகிராம் மியூரியெட் ஒப் பொட்டாஸும் போட வேண்டும். 12 வாரங்கள் ஆன பின்னர் 25 கிலோகிராம் யூரியா போடவேண்டும்.

**நீர் விநியோகம்**

பாத்திகளில் நீர் தேங்கி விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். முதல் 2 மாதங்களுக்குள் 4-5 நாட்களுக்கு ஒரு தடவை நீர் விநியோகிக்க வேண்டும். அதன் பின்னர் வாரத்துக்கு ஒரு தடவை நீர் விநியோகித்தால் போதுமானதாகும்.

பூக்கள் பூத்து, மிளகாய் பிஞ்சுகள் தோன்றும் காலத்தில் நீர் விநியோகம் சீராக இல்லாமலிருப்பின் பூக்களும், பிஞ்சுகளும் உதிர்ந்து விடும்.

**மிளகாய்ச் செடியைத் தாக்கும் நோய்கள்**

1. அந்தத்திரைக்ஸ் னோட்

நுண்ணங்கி ஒன்றினால் இந்த நோய் ஏற்படுகின்றது. ஆரம்பத்தில் இலைகள் வாடத் தொடங்கி படிப்படியாக செடி முழுமையாக வாடிவிடும். மிளகாயில் துவாரங்கள் ஏற்படும். கறுப்பு நிறமான புள்ளிகள் தோன்றும். *(தொடரும்...)*

**சசி சந்திரகாசன்**

# கொமர்ஷல் வங்கியின் கணக்கு மூத்த பிரஜைகளுக்கு வரப்பிரசாதம்

மூத்த பிரஜைகள் வாழ்க்கையை மன நிம்மதியுடன் ஓய்வாக இருந்து அனுபவிப்பதற்கு, திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ள கணக்கே உதார மூத்தோர் கணக்கு ஆகும். வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், பிற்காலத்துக்குத் தேவையான நிலையான நிதி அடித்தளம் ஒன்று இந்தக் கணக்கு மூலம் கிடைக்கிறது.

அத்துடன் நிலையான மாதாந்த வருமானம் ஒன்றும் கிடைக்கின்றது. இந்தக் கணக்கு - 55 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதை அடைந்த மூத்த பிரஜைகளுக்கு பல்வேறு அனுகூலங்களை வரப்பிரசாதமாக வழங்கும் வகையில் கொமர்ஷல் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

'உதார' மூத்தோர்க்கணக்கைத் தொடங்குவதற்கு குறைந்தபட்ச ஆரம்ப வைப்புப் பணமாக - ரூபா 5,000 செலுத்தவேண்டும்.

இதற்குச் சாதாரண சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படும் வட்டியைப் பார்க்கிலும், 1% கூடுதலாக அளிக்கப்படுமென்றாலும், கணக்கு வைத்திருப்பவர்கள் 70 வயதையடையும்போது, மேலதிகமாக 2% வட்டி அதிகரிக்கப்படும். வங்கி தனது சமூகநல பொறுப்பின் நிமித்தம் இப்புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

'உதார' மூத்த பிரஜைகள் கணக்கை வைத்திருப்பவர்களுக்கு பல்வேறு சலுகைகளும், நன்மைகளும் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. உதாரணமாக - கொழும்பு ரீட் அவனியுவில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் மருந்தகத்தில், இவர்கள் தங்களுக்குரிய அட்டையைக் காண்பித்து, கொளவனவு செய்யும் மருந்துவகையின் பெறுமதியில் 7.5% விலைக் கழிவு பெறமுடியும்.

இந்தச் சலுகையை நாடளாவிய ரீதியில் குறிப்பிட்ட சில மருந்த கங்களில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'உதார' மூத்தோர் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு 70 வயதுவரை 1% மேலதிக வட்டி வழங்கப்படுவதுடன், மாதாந்தம் அதைப் பெறமுடியும்.

70 வயதையும் அதைத தாண்டிய வயதையுடையவர்கள் 'உதார' கணக்கைத் திறந்தவுடன் 2% மேலதிக வட்டி கிடைக்கும்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு வருட நிலையான வைப்புகளுக்கும் 1% மேலதிக வட்டியுண்டு.

கொமர்ஷல் வங்கியின் சகல கிளைகளிலும், மூத்தோர் கணக்கை வைதத்திருப்போருக்கு விசேட அடையாளஅட்டை வழங்கப்பட்டு, முன்னுரிமைச் சேவை அளிக்கப்படும். கொழும்பு ரீட் அவனியுவில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியில் 'உதார' மூத்த பிரஜைகளுக்கென நவீன வசதிகள் அடங்கிய பிரத்தியேகமான பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குளிரூட்டப்பட்ட இந்தப் பிரிவில், பொழுதைப் போக் கக்கூடிய தொலைக்காட்சி பார்த்தல், நூல்களை வாசித்தல் போன்றவற்றால் பொழுது போக்க லாம். சக்கரநாற் காலியில் சென்றும் தமது அலுவலக ளைச் சிரமமின்றி நிறைவேற்றலாம்.

இலவச அட்டை, நிறுவனத்தில் கொள்வனவு செய்யும் செயற்கை உறுப்புகளுக்கு விலைக்கழிவு ஆகிய அனுகூலமும் உண்டு. குறிப்பிட்ட சில மருத்துவமனையில் 'உதார' மூத்த பிரஜைகளுக்கு வைத்திய சிகிச்சைக் கட்டணச் சலுகை கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி கிளைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள். இந்தப் புதிய கணக்கின் நன்மைகளைப் பெறுங்கள்.

# தொழில்மலர்

'ஒரு பொருள் வாங்கினால், இன்னொரு பொருள் இலவசம்'. இது போன்ற விளம்பரங்கள் இன்றைய நுகர்வோர் சந்தையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற சூழலில், சந்தையில் நல்ல பெயரெடுத்த பொருட்கள் சிலவற்றைப் பின்பற்றி, சிறிய மாற்றங்களோடு புதிய பொருட்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன..

## புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்த தொழில் முனைவோர் முன்வர வேண்டும்

இந்தப் போட்டியானது, கடந்த சில ஆண்டுகளாகத்தான் அதிகரித்து வருகின்றது. போட்டியாளர்களைச் சமாளிப்பதிலும், அதிக லாபம் சம்பாதிப்பதிலும் கவனம் செலுத்தும் இந்த நிறுவனங்கள்- நுகர்வோர் நலனைக் காப்பதில் கவனம் செலுத்துகின்றனவா? என்றால் சந்தேகம்தான். அவை நுகர்வோர் நலனில் அக்கறை செலுத்துவதில்லை என்பதே உண்மையாகும்.

நுகர்வோர் சந்தையில் கடுமையான போட்டிகளைச் சமாளிப்பதில் கவனம் செலுத்தி, அளவுக்கு அதிகமான விளம்பரச் செலவு, குறைந்த விலை நிர்ணயம், கூடவே இணைக்கப்பட்டிருக்கும் இலவசப்பொருட்களை ஆரம்பத்தில் நுகர்வோருக்கு வழங்கி, சந்தை வாய்ப்பைப் பிடிதது விடுவதில் அக்கறை காட்டுகின்றன இந்த நிறுவனங்கள்.



படிப்படியாகச் சந்தைவாய்ப்பைப் பிடித்த பின்னர், பொருட்களின் விலையைத் தாறுமாறாக உயர்த்திவிடுவது இவற்றின் இயல்பாகப் போய்விட்டது.

ஆனால், விலை ஏற்றத்துக்கு ஏற்ப அந்த நிறுவனங்களின் - பொருட்களின் தரம் உயர்ந்ததா என்றால், இல்லை என்றே கருத வேண்டியுள்ளது. அதனைவிட, இதைப் பற்றிய விழிப்புணர்வு எம்மிடையே இருக்கின்றதா என்றால், அதுவும் இல்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது.

அத்துடன், பன்னாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களின் கைப்பிடியில் இருக்கும் எமது நுகர்வோர் சந்தை - எமது பிரதேச தொழில் முனைவோர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு வாசல் திறககுமா? அதிலும் புதிய தொழில் முனைவோர் இதில் ஈடுபடலாமா? அப்படி ஈடுபட்டாலும், நுகர்வோர் சந்தைவாய்ப்பைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா? இது போன்ற பல சந்தேகங்கள் எமக்குள் எழுவது நியாயமானதே.

இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பதில் முடியும் என்பதேயாகும். நுகர்வோர் சந்தை மீதுள்ள நாட்டம், பிரதேச நுகர்வோர் ஏமாற்றப்படுகின்றார்கள் என்ற ஆதங்கம், அதனை முறியடிப்பதுதான் தமது நோக்கம் என்று சிந்திக்கும் தொழில் முனைவோரால் இது சாத்தியமாகும்.

பன்னாட்டு நிறுவனங்கள் நுகர்வோர் சந்தையை ஆக்கிரமித்துவிட்டன. கடுமையான போட்டி நிலவும் அந்த முயற்சியில் ஈடுபடமுடியாது என்று சொல்லிக்கொண்டிருப்பதில் என்ன இலாபம்? எங்களுக்கு அவர்களுடைய பலம் மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால், அவர்களிடையேயும் பலவீனங்கள் அதிகம் இருக்கின்றன.

அந்தப் பலவீனங்களைத் தெரிந்து கொண்டால், நாமும் எமது நுகர்வோர் சந்தைவாய்ப்பைப் பிடிக்கமுடியும். இதறகு உதாரணமாக - இன்றுவரை சந்தையில் வெற்றிகரமாகவுள்ள எமது உள்ளூர் உற்பத்திகள் சிலவற்றைக் கூறமுடியும்.

அவர்கள் எல்லாம் ஆரம்பத்தில், சிறியளவில் தமது தொழிலை ஆரம்பித்தவர்கள்தான். அப்பொழுதும் இந்தப் பன்னாட்டு நிறுவனங்களின் போட்டி கடுமையாகவே இருந்தன.

அடுத்துப் பன்னாட்டு நிறுவனங்களின் பலவீனங்கள் எவை என்று பார்ப்போமானால் - குறிப்பாக இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் மேல்மட்ட நிலையிலேயே தமது சந்தைப்படுத்தல் உத்திகளைக் கையாள்கின்றன.

இவர்கள் மிகக் குறிப்பாக மக்கள் தொடர்பு சாதனங்களில் விளம்பரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, சந்தைவாய்ப்பைப் பிடிக்கினறனர். ஆனால், அந்த நிறுவனங்கள் கடைநிலை நுகர்வோர் வரை தனது கவனத்தைச் செலுத்துவதில்லை. இதனால், நுகர்வோர்கள் கருத்தை அவர்களால் பெறமுடியாமலேயே போய் விடுகின்றது. இது அவர்களுடைய பலவீனம்.

அதேபோல், பன்னாட்டு நிறுவனங்கள் பல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கென்று ஒரு குழுவை அமைத்து, அதன் அடிப்படையில்தான் நுகர்வோரின் தேவையை அறிந்து கொள்வதாகக் கூறுகிறார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் அப்படிச் செய்வதில்லை. இது போன்ற பலவீனங்கள் அவர்களிடமிருந்து வருகின்றன. இதனைவிடவும் பலவீனங்கள் இருக்கும். இவற்றை அறிந்து எம்மைப் பலமாகப் பயன்படுத்திக்கொள்வதில்தான் வெற்றி அடங்கி இருக்கிறது.

இதனையும்மீறி ஒரு கருத்து எழக்கூடும். எவ்வளவுதான் அவர்களின் பலவீனத்தை நாம் பலமாகப் பயன்படுத்திக் கொண்டாலும், அவர்களின் தரத்துக்கு இணையான உற்பத்தியை எம்மால் கொடுக்கமுடியுமா என்பதேயாகும்.

நிச்சயம் முடியும். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புவரை அவை எம்மால் இயலாமல் இருந்திருக்கலாம். ஆனால், தற்போது அவை எல்லாம் சாத்தியமாகி விட்டன.

அவர்களின் உயர்தொழில்நுட்பங்களை எம்மாலும் உருவாக்கமுடியும். மூலப்பொருட்கள், செய்முறை போன்ற அனைத்துமே இன்டர்நெட், ஈ-மெயில் என்று விரிந்து வரும் கணினித் தகவல் மூலம் ஒரு சில நிமிடங்களில் பெறமுடியும். தொழில் நுட்பத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ளமுடியும். எனவே, எம்மால் தரமாகக் கொடுக்கமுடியாது என்று எப்படிக் கூறமுடியும்?

பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களுடன் போட்டி போட்டு, எமது ஊர்த் தொழில் நிறுவனங்களின் உற்பத்திகள் தோல்வியைத் தழுவுவதற்கான காரணம் எவை என்று பார்ப்போமானால் -

பன்னாட்டு நிறுவனங்கள், எமது பிராந்திய நுகர்வோரின் தேவையையும், எதிர்பார்ப்புகளையும் கண்டு, நாளுக்கு நாள் தங்களை மாற்றியமைத்துக்கொண்டு நவீனத்துவம் செய்து கொண்டே இருக்கிறார்கள். இதற்கேற்ப எமது உள்ளூர் நிறுவனங்கள் தங்களை நவீனத்துவம் செய்து கொள்வதில் தவறிவிடுகின்றன.

மேலும், பன்னாட்டு நிறுவனங்கள் அதிக செலவுசெய்து விளம்பரங்களைக் கொடுப்பதும். அவர்களுடைய அணுகுமுறையில் ஒன்று. நாங்கள் விளம்பரத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

உள்ளூர் உற்பத்திகள் பற்றிய விபரங்கள் மக்களைச் சென்றடைவதும், அதைப் பற்றிய தொடர்ச்சியான விளம்பரத் தொடர்பின்மையும் சந்தை வாய்ப்பைப் பிடிப்பதில் உள்ள குறை பாடாகும். அத்துடன் எமது உள்ளூர் உற்பத் திகளின் பொதியிடல் முறைபற்றியும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

நுகர்வோர் சந்தையைத் தீர்மானிக்கும் மிகமுக்கிய, வெளிப்படையான ஒரு காரணியாகப் பொதியிடல் காணப்படுகிறது. ஒரு பொருளின் வெளிப்புறப் பொதியிடல் முறையே முதலில் நுகர்வோரை அந்தப் பொருள் மீதான தனது பார்வையை அல்லது கவனத்தை ஈர்க்கின்றது. எனவே, உள்ளூர் உற்பத்தியாளர்கள் இதனையும் கவனத்தில் கொள்ளவேண்டிய அவசியமுள்ளது.

எமது பிரதேச நுகர்வோரின், விருப்பு, வெறுப்புகளைக் கண்கூடாக அறிந்து, எமது உற்பத்தியை அவர்களின் தேவைக் கேற்ப சந்தைப்படுத்துவது மிகப்பெரிய பலமாக அமையும். அது மட்டுமன்றி, முன்பு குறிப்பிட்டது போல், பன்னாட்டு நிறுவனங்களின் பலவீனத்தை நாங்கள் பலமாகப் பயன்படுத்திக் கொள்வது. உதாரணமாக -

அதாவது, பன்னாட்டு நிறுவன உற்பத்திப் பொருளை நினைவுபடுத்தக் கூடியதாக எமது பொருட்களின் உற்பத்தியை மேற்கொள்வது.

இதில் தவறு இல்லை. பன்னாட்டு நிறுவனங்களிடம் பணம் அதிகமாக இருக்கிறது. எமது பிரதேச தொழில் முனைவோரின் முக்கிய பிரச்சினையே பணம்தான். அதனால் அவர்களைப் போன்ற தரமும், விலைகுறைவான பொருளையும் நுகர்வோர்களுக்குக் கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது. இவ்வாறான நூதன அணுகுமுறையைப் பெரிய நிறுவனங்களே கையாள்கின்றன.

நுகர்வோரால் ஏற்கனவே அறிமுகமான வடிவத்தில் பொருட்களைத் தயாரிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. பன்னாட்டு நிறுவனங்களின் ஆக்கிரமிப்பில் இருந்து எமது நுகர்வோரை விடுவிக்க இத்தகைய நூதன அணுகுமுறையைக் கையாள்வதில் தவறொன்றும் இல்லை.

அத்துடன் நுகர்வோர் சந்தையில் ஈடுபடும் புதிய தொழில் முனைவோருக்கு இத்தகைய அணுகுமுறைதான் உறுதியான வெறறியைக் கொடுக்கும். எம் மக்களிடையே சுதேச உணர்வு உருவாக வேண்டும். இது ஏற்படா விட்டாலும், இவ்வாறான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, தொழில் முனைவோர் ஏற்படுத்த முன்வரவேண்டும்.

## இருவேறு பாதைகளில் பயணிக்க வேண்டிய தொழில்புரிஞர்



**தொ**ழில் புரிஞர் ஒருவரின் வாழ்க்கையை - தனிப்பட்ட வாழ்க்கை, தொழில வாழ்க்கை என நாம் இரண்டாகப் பார்கக முடியும். இதில் தனிப்பட்ட வாழ்கையை ஒரு பாதை எனக் கொண்டால், தொழில் வாழ்க்கையை இன்னொரு பாதை எனக் கொள்ள வேண்டும். ஆகவே ஒரு தொழில் புரிஞர் இருவேறு பாதைகளில் மாறிமாறி பயணிக்க வேண்டும். இதனை இரண்டாகப் பிரித்துப் பார்த்தாலும், ஏதோ ஒரு விதத்தில் இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாகவே காணப்படுகிறது.

ஏனெனில் தொழில்புரிஞர் ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையின் பல உணர்வுகள், பிரச்சினைகள், அணுகுமுறைகள் அவருடைய தொழில் வாழ்க்கையிலும் பிரதிபலிப்பதைக் காணலாம். அவ்வாறே தொழில் பிரச்சினைகள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் பிரதிபலிக்கிறது.

இதற்குக் காரணம் - ஒரு மனிதனின் அடிப்படையான நடத்தைகள், உணர்வுகள் அடிக்கடி மாறுபடக்கூடியவை அல்ல என்பதும், அவை தம்மை எப்படியும் வெளிப்படுத்தி விடும் என்பதுமே ஆகும்.

அந்த வகையில் பொதுவாக நாம் வாழ்க்கை என்று பார்த்தால், 'வாழ்க்கை ஒரு ஓட்டப்பந்தயம்' போன்றது என்றே சொல்ல வேண்டும். இங்கு தனிப்பட்ட வாழ்க்கையாயினும் சரி, தொழில் வாழ்க்கையாயினும் சரி - எல்லோரும் ஓடத்தான் வேண்டும். சிலர் விரைவாக ஓடுகின்றார்கள். சிலர் மெதுவாக ஓடுகின்றார்கள். மேலும் சிலர் நடந்தே சென்று பந்தய எல்லையைத் தொடுகிறார்கள். வேறு சிலரோ - ஓடிவிழுந்து, எழுந்து ஓடிமுடிக்கிறார்கள். இதிலும் சிலர் மெதுவாகத் தொடங்கி, விரைவாக ஓடுவார்கள் அல்லது விரைவாகத் தொடங்கி மெதுவாக ஓடிமுடிப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதமாக ஓடி ஓட்டப்பந்தயத்தை முடிக்கிறார்கள்.

விரைவாக ஓடுபவர்கள் தங்களது திறமைக்கும், உழைப்புக்கும், புத்திசாலித்தனத்துக்கும், சமயோசிதத்துக்கும் ஏற்றவாறு ஓடிமுடிக்கிறார்கள். மற்றவர்கள் விவேகமின்மை, நிதானமின்மை, ஊக்கமின்மை போன்ற காரணங்களால் பின் தங்குகிறார்கள். இவர்களில் சிலரின் இந்த வகையான செயற்பாடுகள் போதாதென்று தமது மோசமான அணுகுமுறைகளாலும் பல தடைகளைத் தமக்குத் தாமே உருவாக்கிக் கொள்கிறார்கள்.

இந்தத் தடைகளாக - மனக்கசப்பு, வெறுப்பு, மூர்க்கத்தனமான பேச்சு, அர்த்த மற்ற அணுகுமுறை போன்றவற்றைக் கூறமுடியும். இவையெல்லாம் கலந்து ஒரு எதிர்மறையான சூழலை உருவாக்கி தடைகளை ஏற்படுத்தும். இவற்றை அவர்களின் தனிப்பட்ட உணர்வுகளின் வெளிபபாடான நடவடிக்கைகளாகவே கருதவேண்டும். இவ்வாறு தனக்குத் தானே தடையை ஏற்படுத்துவது ஒருவகையாக இருந்தால், இன்னொரு வகையான தடை வெளியிலிருந்து வருகிறது.

இவை எதிர்பார்த்த, எதிர்பாராத தடைகளாகவும் இருக்கலாம். இது பொதுவாக எமது சூழலிலிருந்து - சக மனிதர்களால் சமூகத்தால், பொருளாதார அரசியல் நடவடிக்கைகளால் ஏற்படலாம்.

ஆகவே தனிப்பட்ட வாழ்க்கை, தொழில வாழ்க்கை என்ற இந்த ஓட்டப்பந்தயத்தில் - தனக்குரிய ஓடு பாதைகளின் தடைகளை, எவ்வாறு இனங்காண்பது? பின்னர் எவ்வாறு இதனை அணுகித் தடைகளை நீக்குவது? என்பதைப் பற்றி ஒவ்வொரு தொழில்புரிஞரும் தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

அதுவே ஆக்கபூர்வமான, தனிப்பட்ட தொழில் வாழ்க்கைகளின் வெற்றிக்கு வழிவகுக்கும். இல்லையெனில், அந்த தொழில்புரிஞரால் தன்னுடைய குடும்ப வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கும், தான் சார்ந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் பங்களிக்க முடியாமல் போகும்.

- இரா.சுபோதினி

## சந்திப்பு

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் யு.என்.எச்.சி.ஆர்.பிரதிநிதியை நேற்றுமுன்தினம் சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் தமிழீழ காவல்துறையின் நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது மனித உரிமைகள், பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## முல்லைத்தீவு-மாந்தை கிழக்கு பிரதேசத்தில் கண்ணிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பிரதேசத்தில் கண்ணிவெடி விழிப்புணர்வு செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த 1999 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ 1, ரணகோஷ 2 இராணுவ நடவடிக்கைகளின் போது, பணங்காமம், இளமருதம்குளம், மூன்றுமுறிப்பு, சிராட்டிக்குளம், கொம்புவைத்தகுளம், கிடாய்பிடித்தகுளம், செல்வபுரம், பாண்டியன்குளம், வவுனிக்குளம் ஆகிய பகுதிகளில் கண்ணிவெடிகளையும், வெடி மருந்துப் பொருட்களையும் படையினர் விட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்காக கண்ணிவெடி விழிப்புணர்வு செயற்பாடுகளும், கருத்துரைகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பணங்காமம் பிரதேச வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பாளர் தெய்வேந்திரம் ரஜனி தலைமையில் இடம்பெற்று வருகின்றது.




## இலங்கை அகதிகள் 19 பேர் தலைமன்னார் வந்தடைந்தனர்

இந்திய அகதி முகாம்களில் தங்கியிருந்த 19 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் ஊடாக தலைமன்னாரை வந்தடைந்தனர்.

சிறிய படகு ஒன்றின் மூலம் தலைமன்னாரை வந்தடைந்த இவர்களுள் 10 பெண்களும், 9 ஆண்களும் அடங்குவர்.

தலைமன்னாரை வந்தடைந்த இவர்கள் தத்தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (201)

## ஒக்ஸ்பாம் உதவியுடன் மலசலகூடம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி - மாயவனூர் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களுக்கென 'ஒக்ஸ்பாம்' உதவியுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக் கழகத்தால் மலசலகூடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. (9)

## பஸ்சேவையை விஸ்தரிக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலிருந்து நாயக்கர் பகுதி ஊடாகச் செல்லும் பஸ் சேவையை விஸ்தரிக்குமாறு கோரியும், இதுவரையில் பலன் எதுவும் கிடைக்கவில்லை என அந்தப் பகுதி மாணவர்கள், உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு பல கடிதங்கள், மகஜர்கள் கையளிக்கப்பட்டபோதும், இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் இது சம்பந்தமாக எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## பஸ் தரிப்பிடம் இன்மையால் பூநகரி மக்கள் பெரும் சிரமம்

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் பஸ் தரிப்பிடம் இல்லாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மண்ணர் கிக்கேட்டக்குளம் சந்தி, வாடியடி போன்ற இடங்களில் பஸ் நிலையம் இன்மையால் பஸ்ஸிற்காக காத்து நிற்கும் மக்கள் வெயிலாலும், மழையாலும் ஒதுங்க இடமின்றி காத்து நிற்க வேண்டியுள்ளது. இதனால் பஸ்ஸிற்காக காத்து நிற்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## - கட்டுக்கரை குளத்தின் -
## நீர் விநியோக வாய்க்கால்களை நிகொட் நிறுவனம் புனரமைப்பு

மன்னார் மாவட்டத்தின் பிரதான நீர்ப்பாசனக் குளமான கட்டுக்கரை குளத்தின் நீர் விநியோக வாய்க்கால்களை நிகொட் நிறுவனம் புனரமைப்புச் செய்து வருகின்றது.

குளத்திலிருந்து அடம்பன் சந்தி வரையான 5 கிலோமீற்றர் வரை நீளமான வாய்க்காலும், இந்த வாய்க்காலின் 4 பிரதான பாலங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட சில காலங்களுக்கு முன்னதாகவே முடிந்திருக்க வேண்டிய இந்தப் பணிகள் இன்னும் முழுமையாக முடிக்கப்பட வில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

## ஏழாயிரம் இடம்பெயர்ந்த குடும்பங்கள் வவுனியா மாவட்டத்தில் வசிப்பு!

கடந்தகால யுத்தத்தால் தமிழர் பிரதேசங்களில் இருந்து, இடம்பெயர்ந்த 7 ஆயிரத்து 249 குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்து 824 பேர் வவுனியா மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 2562 குடும்பங்களும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 2567 குடும்பங்களும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 869 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 585 குடும்பங்களும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 621 குடும்பங்களும், வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 45 குடும்பங்களும் வவுனியா மாவட்ட நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர் என தெரியவருகின்றது.

## பூநகரி பனம் வெல்லத் தொழிற்சாலையை இயங்க வைக்குமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி - பூநகரிப் பகுதியில் இயங்கிவந்த பனம் வெல்லத் தொழிற்சாலையை மீள இயங்க வைக்குமாறு, இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்தகாலப் பகுதியில ஏற்பட்ட வலம்புரி இராணுவ நடவடிக்கையை அடுத்து மூடப்பட்ட வெல்லத் தொழிற்சாலை இதுவரையில் மீள இயக்கப்படவில்லை.

கடந்தகாலங்களில் இத்தொழிற்சாலை இயங்கியபோது, பலர் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டதுட ன், நாள் ஒன்றுக்கு 200 கிலோ கிராம் வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பன்னவேலை பயிற்சிநெறி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு வானவில் தாய்சேய் போசாக்கு நிலையத்தில் தங்கி இருக்கும் பெண்களுக்கான பன்னவேலை பயிற்சிநெறி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் பனை அபிவிருத்தி சபையால் இந்த பயிற்சி வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

## திலீபனின் நினைவு நாளையொட்டி கிராமங்கள் தோறும் சிரமதானப்பணி

உண்ணாநோன்பிருந்து தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, ஜெயபுரம் கிராமத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜெயபுரம் தெற்கு மாதர் சங்கம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன இணைந்து சிரமதானப் பணியை மேற்கொண்டு வருகின்றன.

மேலும் மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களால் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்ல வளாகமும் துப்பரவு செய்யப்பட்டது.

இதேவேளை பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், மாங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்புட்டு வருகின்றன.

## மன்னார் பெரியமடு குள பிரதேசத்தில் 250 ஏக்கரில் சிறுபோகநெற்செய்கை

மன்னார் பெரியமடு குளப் பகுதி 250 ஏக்கர் நிலத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ரணகோஷ இராணுவ நடவடிக்கை மூலம் இந்தப் பகுதியை கைப்பற்றிய படையினர் விவசாய செய்கைக்கு தடைவிதித்திருந்தனர். மீண்டும் ஓயாத அலைகள்-3 நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட இந்தப் பிரதேசத்தில், இந்த முறையே சிறுபோக நெற்செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் பள்ளமடுப் பிரதேச விவசாயிகளின் 2004 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கைக்குரிய கலந்துரையாடல் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## சிறுவர் தின நிகழ்வுகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சிறுவர் தின நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பேசாலை, நானாட்டான், முருங்கன், மடு ஆகிய பிரதேசங்களில் சிறுவர் தின நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்வின் முதன்மை நிகழ்வு மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## புதிதாக அமைக்கப்பட்ட கிணற்றில் நீர் இல்லாமையால் மக்கள் சிரமம்

முள்ளியவளை நாவற்காடு கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுக் கிணற்றில் நீர் வற்றியுள்ளமையால், இந்தக் கிராம மக்கள் குடிநீர் பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி 150 ஆம் கட்டை பகுதியில் நீரில்லாத நிலையில் புதிதாக கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கிணற்றால் மக்களுக்கு எதுவித நன்மைகளும் கிடைக்கவில்லை. இதனால் இந்தப் பகுதி மக்கள் குடிநீரைப் பெறுவதற்கு பல மைல்களுக்கு அப்பால் செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

## முள்ளியவளைப் பிரதேசத்தில் கட்டாக்காலிகளால் தொல்லை

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் நீண்டகாலமாக கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

முள்ளியவளை சந்தை, காட்டு விநாயகர் கோவில்சந்தி, வற்றாப்பளை, கிரான் ஓமார் சந்தி, முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லப் பகுதி, கணுக்கேணி பிரதான வீதி ஆகிய இடங்களிலேயே கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

இந்தப் பகுதிகளில் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக திரியும் கட்டாக்காலி கால்நடைகள் இரவுவேளைகளில் வீதிகளில் நடமாடுவதால், வீதியினூடாகப் போக்குவரத்துச் செய்வோர் விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

மேலும் இந்த கால்நடைகளின் கழிவுகள் மழைகாலங்களில் வீதிகளை அசுத்தப்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

## வெடிபொருள் அகற்றாமையால் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல்

(ஆனையிறவு)

கட்டைக்காட்டின் பல பகுதிகளில் வெடிபொருட்கள் அகற்றப்படாமையால், பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

கட்டைக்காட்டுப் பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த சமயம், கட்டைக்காட்டிலிருந்து ஆனையிறவு வரையான சுமார் 15 கிலோ மீற்றர் வரையான கடற்கரையோரப் பகுதியல் மண் அணைபோடப்பட்டு அணையில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டன.

இதனால், கடல்தொழில் செய்வோர் மற்றும் அந்தப் பகுதியில் குடியிருப்போர், விவசாயம் செய்து வந்தோர் எனப் பலரும் பாதிக்கப்பட்டுவருகின்றனர்.

இதுகுறித்து அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் பல தரப்பினருக்கும் அறிவித்த போதிலும் இதுவரையில் எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எவராலும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியிலுள்ள பயன்தருமரங்களான தென்னை, பனை, மா முதலானவற்றின் பயன்களைப் பெறுவதற்காக சென்ற சமயம், பல பொதுமக்கள் கடந்த காலங்களில் வெடிபொருட்களால் அங்கவீனர்களாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (21)

## மாவீரர் லெப்டினன்ட் நாதனின் நினைவுக்கல் திரை நீக்கம்

கடந்த 1995 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைச் தழுவிக்கொண்ட லெப்.நாதன் (முத்துக்குமாரசுவாமி சசிக்குமார் - புங்குடுதீவு) என்ற மாவீரரின் நடுக்கல் கடந்த திங்கட்கிழமை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்த மாவீரரின் திருவுருவப்படம் புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கனகசுந்தரசுவாமி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதை அடுத்து மலர்மாலையை மாவீரரின் சிறிய தந்தையும், சிறிய தாயாரும் அணிவித்தனர்.

இந்த நிகழ்வின் அஞ்சலி உரையை - முல்லைத்தீவு வலய கல்விப பணிப்பாளர் குருகுலராஜா நிகழ்த்தினார். நினைவுரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து மாவீரரின் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்டு, விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் நடுகல் திரைநீக்கம் செய்யப்பட்டது.

## மோட்டார் சைக்கிளின் பாவனை வவுனியா மாவட்டத்தில் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள் பாவனை மிகவும் அதிகரித்துள்ளது என மோட்டார் போக்குவரத்துப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு மட்டும் 10 ஆயிரத்து 35 மோட்டார் சைக்கிள்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. வவுனியா அரச செயலகத்தில் 9500 மோட்டார் சைக்கிள்களும், வவுனியா தெற்குப் பிரதேச செயலக பிரிவில் 265 மோட்டார் சைக்கிள்களும், செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவில் 270 மோட்டார் சைக்கிள்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு மூன்று பிரதேச செயலகபிரிவுகளிலும் 378 கார்கள், 101 பஸ்கள், 640 லொறிகள், 1965 சிறியவகை வாகனங்களுமாக மொத்தமாக 12 ஆயிரத்து 658 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. செட்டிக்குளம் பிரதேச செயலகபிரிவில் 398 வாகனங்களும், வவுனியா தெற்குப் பிரதேச செயலகபிரிவில் 386 வாகனங்களும் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அடுக்கிய கோடி பெறினும் குடிபிறந்தார்
குன்றுவது செய்வதிலர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பல்லவியை மாற்றும் அரசு

உலக சமாதானதினத்தை முன்னிட்டு - அரசாங்க மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து வெளியிடப்பட்ட செய்திகள் பொதுமக்களைப் பொறுத்தவரையில் பெரும் நிம்மதியைக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

இரண்டுதரப்புக்களுமே - தாம் கௌரவமான சமாதானத் தீர்வை எட்டுவதற்கான பேச்சுக்களை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக கூறியுள்ளனர்.

அண்மைக்காலமாக இடம்பெற்றுவந்த சில சம்பவங்கள், அதன் விளைவாக வெளியிடப்பட்ட கருத்துக்கள் என்பன - எப்போது மீண்டும் யுத்தம் வெடித்துவிடுமோ என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், உலகசமாதான தினத்தில் இருதரப்புக்களுமே தாம் சமாதானப் பேச்சுக்கள்மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகான திடசங்கற்பம் பூண்டிருப்பதாக கூறியிருப்பது பொதுமக்களைப் பொறுத்தவரை பெரும் நிம்மதியேயாகும்.

யுத்தம் ஏற்பட்டால் பொதுமக்களே அதிக இழப்புக்களை சந்திப்பது வழக்கம். இந்த அடிப்படையில் பொதுமக்கள் நிம்மதி கொண்டாலும் - சமாதானப்பேச்சுக்கள் என்பது நம்பிக்கையூட் டக்கூடிய வகையில் தொடருமா என்பது சந்தேகமே.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகாதான் கூடியளவு நெகிழ்வுத்தன்மையுடன் புலிகளுடன் பேச்சுநடத்த தயாராக இருந்தபோதும், அதைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை எனக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

அதுபோன்றே உலக சமாதான தினமாகிய நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்திலும், அதற்கு முதல்நாள் ஆசிய நிலையத்தில் நடந்த கூட்டத்திலும் சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கு புலிகளே தடையாக இருப்ப தாகக் கூறியிருந்தார்.

ஆனாலும், இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமாயின் விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்துவதைத் தவிர வேறுவழியில்லை எனவும் - அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவருவதாகவும் ஐ.நா.கூட்டத்தொடரில் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டிருக்கிறார்.

ஐ.நா.கூட்டத்தொடரில் ஜனாதிபதி சந்திரிகா - தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க புலிகளுடன் பேசுவதைத்தவிர வேறுவழியில்லை என்ற உண்மையை போட்டுஉடைத்துவிட்டார்.

இது ஒரு முக்கியமான மாற்றமாக இருந்தாலும், அரசாங்கம் இதற்கான எந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பது தான் இப்போதுள்ளகேள்வி.

சமாதான முயற்சிகளில் நடுநிலையாளராக ஈடுபட்டிருக்கும் நோர்வே அரசாங்கம் - மீளவும் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் முன்னேற்றம் எட்டப்படாமல் விரக்தியடையும் நிலைக்குப்போய்விட்டது.

புலிகளுடன் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுநடத்த அரசாங்கம் தயங்கிவருவதே இப்போதைய நெருக்கடிநிலைக்கு காரணமாகும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் புலிகளுடன் எப்போதும் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக - அறிக்கைகள், வீறாப்பான பேச்சுக்கள் அரசதரப்பில் இருந்து வெளிவிடுவதில் மட்டும் எந்தக் குறைவும் இல்லை.

புலிகள் தரப்பு நிறையவே விட்டுக்கொடுப்புக்களைச் செய்து - நெகிழ்வுப்போக்குடன் பேச்சுக்களை நடத்த தயாராக இருந்தாலும் - அதற்கு அரசு இணங்காததால் நெருக்கடிநிலை வலுவடைந்துவந்தது.

இப்போதும்கூட இரண்டுதரப்புக்களில் இருந்தும் நம்பிக்கையூட்டக்கூடிய கருத்துக்கள் மட்டும் வெளிவருகின்றதேதவிர- அவை ஆக்கபூர்வமான, செயல்வடிவம் பெறுபவையாக இருக்கவில்லை.

புலிகள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களை எப்படியாவது யுத்தத்துக்குள் இழுத்துவிடவேண்டும் என்ற முயற்சியில் அரசு தோல்விகண்டுவிட்டது.

விடாப்பிடியான பொறுமைப்போக்கை புலிகள் கடைப்பிடித்ததால் - புலிகளைச் சர்வதேசரீதியில் பயங்கரவாதகள் எனப் பட்டம்சூட்டி ஓரம்கட்ட மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

இந்த நிலையில்தான் இப்போது புலிகளுடன் பேசுவதைவிட வேறுவழியில்லை என்றும் -ஆனால் அவர்கள் பேச்சுக்கு வருகிறார்கள் இல்லை என்றும் தனது பல்லவியை அரசாங்கம் மாற்றத்தொடங்கியிருக்கிறது.

இந்த நிலைமையானது சமாதான முயற்சிகள் முன்னேற்ற மடைவதற்கான அறிகுறியாகத் தென்படவில்லை. ஏதோ ஒப்புக்குச் சமாதானத்தில் விருப்புக்கொண்டிருப்பதாக அரசாங்கம் வெளிப்படுத்தும் கருத்துக்கள் செவிக்கு இனிமையாக இருந்தாலும், அது நாவுக்கு சுவையாக அமையும்வரை எந்த நன்மையையும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தாது. இதுவே சிங்களமக்களுக்கும் பொருந்தும்.

## நாடும் நடப்பும்



### வை.எம்.சி.ஏயின் ஏற்பாட்டில்

# வட பகுதி, தென்பகுதி இளைஞர் - யுவதிகள் பங்கேற்கும் சமாதானத்தை வலுப்படுத்தும் நோக்கிலான சங்கம நிகழ்வு

வடபகுதி, தென்பகுதியைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் சங்கமிக்கும் இளையோர் சங்கம நிகழ்வொன்றை வை.எம்.சி. ஏயின் தேசிய மன்றம் ஒழுங்குசெய்துள்ளது. நாளை முதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தென்பகுதியைச் சேர்ந்த 40 இளைஞர் யுவதிகளும், வடபகுதியைச் சேர்ந்த 20 இளைஞர் யுவதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

'பிரதேசங்களுக்கிடையிலான காயங்களைக் குணமாக்கும் வேளை' எனும் தொனிப்பொருளிலேயே இந்த சங்கம நிகழ்வு நடைபெறவுள்ளது.

நாளை இரவு கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்தில் ஒன்றுகூடவுள்ள தென்பகுதி இளைஞர் யுவதிகள் குழு பின்னர் வடபகுதி புறப்படவுள்ளனர். நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தை வந்தடையும் இந்தக் குழுவினர் வடபகுதியைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுடன் இணைந்து பல நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குகொள்ளவுள்ளனர்.

முதலில் தென்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு யாழ்ப்பாணத்தினுடைய தற்போதைய நிலை தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளதுடன், மறுநாள் காலை உயர் பாதுகாப்பு வலயங்கள், அகதி முகாம்கள், மீன்பிடித்துறை சார்ந்த கிராமங்கள், விவசாயக் கிராமங்கள், மிதிவெடி அபாயமுள்ள பகுதிகள் என்பவற்றுக்கும் இவர்கள் அழைத்துச்செல்லப்படவுள்ளனர்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ள இளைஞர் குழு நல்லூர் முருகன் கோவில், கிட்டு பூங்கா, செம்மணி மனித புதைகுழிகள் அடங்கிய பகுதி, ஆயர் இல்லம் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் சாவகச்சேரி, மாதகல், பருத்தித்துறை, குருநகர், பாஷையூர், தெல்லிப்பளை ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ள இந்தக் குழுவினர் - அங்குள்ள பொதுமக்களுடன் கலந்துரையாடவுள்ளதுடன், சமாதானம் தொடர்பான அம்மக்களின் கருத்துக்களையும் கேட்டறியவுள்ளனர்.

(94)

# இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஒருமித்த நிலையான முடிவு அவசியம்

### காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

(வவுனியா)

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதானால், அரசாங்கமோ அல்லது அதன் அங்கத்துவக் கட்சிகளோ ஒரு நிலையான முடிவைக் கொண்டிருக்கவேண்டும் என்று தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்தார்.

அரசின் கூட்டுக்கட்சியான ஜே.வி.பி - தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான நடவடிக்கைகள் தொடர்பில் வெளியிட்டுவரும் முரண்பாடான கருத்துக்கள் குறித்து புலிகளின் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - ஜே.வி.பியால் தற்போது வெளியிடப்பட்டுவரும் கருத்துக்கள் அவர்களின் அரசியல் மீதான முதிர்ச்சியின்மையையே காட்டுகின்றது.

ஜே.வி.பியினர் இனவாதக் கொள்கையை கொண்டவர்களாகவும், காலத்துக்குக்காலம் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டவர்களாகவுமே செயற்பட்டுவருகின்றனர்.

1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரே நாளில் ஆட்சியைக் கைப்பற்றப்போவதாக ஆயுத வழியில் தமது செயற்பாட்டை முன்னெடுத்த ஜே.வி.பியினர் பின்னர் ஜனநாயக வழியில் செயற்பட்டனர்.

பின்னர் 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் ஆயுத வழியின் மூலமே நாட்டின் தீர்வை எட்டமுடியும் என்று தெரிவித்து செயற்பட்டனர். பின்னர் தற்போது ஜனநாயக வழியில் செயற்பட்டு வருகின்றனர்.

ஆரம்பம் முதல் இந்தியாவுக்கு எதிரான கொள்கையைக் கொண்டவர்களாகவும், இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற இந்திய எதிர்ப்புக் கருத்துக்களை தென்னிலங்கை கிராமப்புறங்களில் விதைத்து வந்தவர்களாகவும் செயற்பட்டு வந்த ஜே.வி.பியினர், தற்போது இந்தியாவுடன் நல்லுறவை ஏற்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுவருகின்றமையையும் சுட்டிக் காட்டினார்.

# பொதுமக்கள் மீது அக்கறையிருந்தால் பிரதமர் போராட்டத்தில் இணையட்டும்!!

## முன்னாள் எம்.பி வேலாயுதம் அழைப்பு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பொதுமக்கள் மீது உண்மையான அக்கறை இருக்குமானால், நாளை ஐக்கிய தேசியக் கட்சி நடத்தவுள்ள போராட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம் இந்த அழைப்பை விடுத்தார்.

தற்சமயம் தாம் எதிர்க்கட்சியில் இருந்திருந்தால், வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு எதிராகப் போராட்டம் நடத்த முன்வந்திருப்பதாக, அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ கூட்டம் ஒன்றில் தெரிவித்தமை குறித்தே இந்த அழைப்பை அவர் விடுத்திருந்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட மக்களின் துயரத்தை மதிக்காது, அரசாங்கத்தில் தமது கட்சி அரசியல் கருதி இணைந்துகொண்டுள்ளது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவியளிக்கும் நிலைப்பாட்டில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண, நாளை மாலை 4 மணிக்கு கொழும்பு கோட்டையில் நடைபெறவுள்ள அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் சுமார் 25 ஆயிரம் பேர்வரையில் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

தாம் ஆட்சிக்கு வந்தவுடன் அரசாங்க ஊழியர்களின் வேதனத்தை 70 வீதத்தால் அதிகரிப்பது, மற்றும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவது என்று உறுதி மொழிகளை அரசாங்கம் காப்பாற்றிக் கொள்ளவில்லை.

இது இந்த உறுதிமொழிகளை வழங்கிய ஜே.வி.பியின் அமைச்சர்களான லால்கந்த போன்றவர்களின் அரசியல் எதிர்காலத்தை வீழ்ச்சியடையச் செய்யும் என்பதால், அவரும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# தியாகி திலீபனின் நினைவாக.....

செப்ரெம்பர் 26ஆம் திகதி தியாகி திலீபனின் நினைவு நாள். சராசரி பள்ளி மாணவனாகவிருந்து தனது ஆற்றலினால் மருத்துவ பீடமாணவனாகி, வாழத்துடிக்கும் மக்களுக்காக விடுதலைப் போராளியாகி தலைவன் வழிசென்று தரணியில் புதிய வரலாறு படைத்தான்.

தன்னைப்பாதுகாத்து கொள்ள, நிம்மதியாக வாழ எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராகிவிடும் என்பதே யதார்த்த நிலையாகும். இன்று 17 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களின் தியாகம் அதனை நிருபித்துள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 900 நாட்கள் வரை செய்கிறது. போராடாவிட்டால் நாம் அழிந்துவிடுவோம். எமது இலக்கை அடையும் வரை எமது வாழ்வுரிமைக்காக நாம் தொடர்ந்து போராடுவோம் என்றான். இப்போது அதனை தமிழர் இறுக்கிப் பிடித்துள்ளனர்.

ஆகவே, பாரத அரசிடம்தான் நாம் உரிமை கோரிப் போராடவேண்டும்.

எனவேதான், பாரதத்துடன் தான் யுத்தமொன்றைத் தொடுத்தான் தீலிபன். அத்தோடு, பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டான். மக்களின் ஒன்றுதிரண்ட சக்தி மூலமே மக்களின் ஒன்று திரண்ட சக்தி மூலமே, மக்களின் ஒரு முகப்பட்ட எழுச்சி மூலமே, நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். தலீபனின் ஈடு இணையற்ற தியாகத்துக்கு நாம் செய்யும் பங்களிப்பு இதுதான் எனத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் திலீபன் சாவு குறித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார். இந்தச் செய்தி மூலம் அன்றைய காலகட்டத்தையும், திலீபன் கொண்டிருந்த உணர்வையும் மக்கள்மீது செலுத்திய அன்பையும் தெட்டத் தெளிவாக வெளிக்காட்டுகிறது.

## தமிழ் மக்களின் இன்றைய எழுச்சி நிலைக்கு திலீபனின் தியாகம் அற்புதமான அடித்தளமாகும்



திலீபன் அவர்கள் நாட்டிய வழி, உண்ணா நோன்பின் மருத்துவம் இப்போது பெரும் விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

போராட்ட வலு, போராடும் வலு காத்திரமான பயனுள்ள அனுபவங்களை பெற்றுத் தந்திருக்கிறது.

திலீபனது இலட்சியத்தை வீச்சாக்க விரைந்து செயற்பட்ட தமிழினம் தயாராக இருக்கிறது. கால வெள்ளத்தில் அள்ளுண்டு போன எத்தனையோ விடுதலைப் போராட்டங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் ஈழத் தமிழனது விடுதலைப் போராட்டம் நேர்த் தியாகச்சென்று கொண்டிருக்கிறது. இலக்கை எட்டும்வரை தொடர்ந்து பயணம் செய்யும். உலகின் பார்வை இப்போது இங்கே திரும்பியிருக்கிறது.

முப்பது வருடகால போராட்டத்தை நடத்திய புலிகளின் உண்மையான போராட்டத்தை - இப்போதுதான் சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது. உதவ முன்வந்துள்ளது.

திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டு கொண்டிருக்கும் அதேவேளை விடுதலைப்புலிகளின் போரியல் வரலாற்றில் எத்தனையோ வியத்தகு சாதனைகளைப் படைத்திருக்கிறது. அற்புதமான



தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் புரிந்திருக்கிறது. அவற்றுக் கெல்லாம் அடிப் படையாக திலீபனது அரசியல் இராஜ தந்திரங்கள் இருந்து வருகின்றன. விடுத லைப் போராட்ட வரலாற்றில் திலீபனின் சாவு காலத்துக்குக் காலம் பெரும் விளைவு களை ஏற்படுத்திய வண்ணமே இருக்கிறது. அவனது ஆன்மா வெற்றிக்கு வலுச்சேர்க்கிறது என்பதை இன்று அனைவராலும் உணரப்படு கிறது.

உலகம் பூராகவும் சென்று கொண்டு வந்து குவித்த ஆயுதங்களோடு- உலக இராணுவ விற்பன்னர்களது ஆலோசனைகளோடு வருடக்கணக்கில் பயிற்சியெடுத்து தனது பலமெல்லாவற்றையும் ஒன்று குவித்து, பெரும் ஆரவாரத்தோடு அரசாங்கம் மேற்கொண்ட பல இராணுவ நடவடிக்கைகள் மிக நுட்பமாக விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டுள்ளன. இவற்றை நோக்கின் திலீபனும் ஏனைய மாவீரர்களும் காட்டும் வழி பிரகாசமாக தெரிகிறது.

அடக்கு முறைகளுக்கு அடிபணிந்து, அடிமைகளாக வாழ்வதைவிட விடுதலைக்காக எந்தவிலையையும் கொடுக்கத் தயாராக ஈழ தேசம் இருக்கிறது. போராடும் ஆற்றலை நாம் பெற்றுள்ள இனமாக உருவெடுத்துள்ளது.

அன்று கோட்டை வாசலில் நின்று கொண்டு, இந்தக் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்குதோ அன்றுதான் சுதந்திர விடியலின் ஆரம்பம் என்றான் திலீபன். திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளில் அவன் விரும்பியவாறு கோட்டையில் புலிக்கொடி பறந்தது. அந்த வரலாற்றுப் பதிவு இன்று உலகுக்குப் பல செய்திகளை சொல்கின்றன.

எந்தவொரு ஏகாதிபத்தியவாதிகளாலும் விடுதலைக்குப் போராடும் இனத்தை நீண்ட காலத்துக்கு அடக்கியாள முடியாது. அது சென்றுவிட்டன. இன்னமும் இதற்கு உயிர் கொடுக்கவில்லை. நோர்வேயின் சமாதானத்துக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நோர்வேக்கும், இலங்கைக்கும் மாறி மாறிப் பறந்தும், ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரை வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. இதுதான் இன்றைய யதார்த்த நிலை.

இயல்பு வாழ்க்கை வரும், அமைதிவரும், சமாதானம் வரும் என்று காத்திருந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றம், உடனடி மனிதாபிமானப் பணிகள்கூட இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

இராணுவத்தீர்வின் மீது ஆசை கொள்ளும் பேரினவாத அழுத்தம்கொண்ட சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் எவ்வாறு தீர்வொன்றை முன்வைக்கப் போகிறார்கள்?

விடுதலைப் புலிகளால் சிறிலங்கா அரசிடம் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையோசனை குறித்து, ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள சிங்கள ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர். இது விடயத்தில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப்புலிகளிடம் கையளிக்க வேண்டும். இல்லையேல் சர்வதேச சட்ட விதிகளுக்கமைவாக, பிரிந்து சென்று தனி நாடு அமைத்துக்கொள்வோம். என தமிழர் தரப்பில் இருந்து கூக்குரல் எழுப்பத் தொடங்கியுள்ளன. கடந்த முப்பது ஆண்டுகளாக இனப் படுகொலைகள் புரிந்து தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்த இனவெறி சிங்கள ஆட்சியாளர்கள் இதுவரை இழைத்த அநீதி போதாதென்று, மீண்டும் போரைத் திணிக்க முயல்கின்றனர். இதற்கு சர்வதேச சமூகம் துணை போகக் கூடாதென்பதே தமிழரின்

> **திலீபன் தமிழ் மக்களுக்காக இறந்தான்! அவர்களின் உரிமைக்காக இறந்தான். தமிழ் மண்ணுக்காக இறந்தான். தமிழரின் பாதுகாப்புக்காக, சுதந்திரத்துக்காக, கௌரவத்துக்காக இறந்தான். தான் நேசித்த மக்களுக்காக, தான்நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உள்ளத் தியாகத்தைச் செய்ய முடியுமோ? அந்த அற்புதமான அர்ப்பணிப் பைத்தான் அவன் செய்திருந்தான்.**

வேண்டுகையாகவிருக்கிறது.

தீர்வு இல்லாத சமாதானத்தை தமிழர்கள் வெறுக்கிறார்கள் என்பதை ஆட்சிப் பொறுப்பிலுள்ள ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் உணர்ந்து கொள்ளவேண்டும். இதய சுத்தியுடன் விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவேன் என ஜனாதிபதி கூறிவருவதை தமிழர்கள் நம்பத்தயாரில்லை.

ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் பேச்சுவார்த்தையில் உண்மையில் அக்கறை உள்ளவராகவிருந்தால், அதனை செயலிலே காட்டவேண்டும். இல்லாவிட்டால் அதன் எதிர் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தமிழருக்குத் தீர்வொன்று விரைந்து தேவைப்படுகிறது. அதனை இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை வழங்குவதன் மூலமே சாத்தியமாகும். இதைவிட மாற்றுத் திட்டமெதனையும் முன்வைக்க விடுதலைப் புலிகள் தயாரில்லை. அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்கு அடிப்படை இடைக்கால தன்னாட்சி அதிகார அலகுதான். விடுதலைப் புலிகள் பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்து, இறுதியாக இந்த முடிவுக்கு வந்தார்கள் உலகில் எப்பகுதியிலிருந்து எந்த அழுத்தம் வந்தாலும், மேலும் ஒரு விட்டுக் கொடுப்பைச் செய்யத் தமிழ் மக்கள் தயாரில்லை. அதற்குரிய ஆணையையும் 2004 பொதுத்தேர்தல் மூலம் வழங்கியுள்ளார்கள் எனத் தமிழ் மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

தியாகி திலீபனது சிந்தனைகள்தான் இப்போது தமிழ் மக்களை எழுச்சிகொள்ளச்

அடுத்த கட்டமென்ன? மீண்டும் போரா? போர் வந்தால் தாங்குமா? போரில்லாமல் தீர்வில்லையா? பேச்சுவார்த்தை நடக்குமா? இயல்பு வாழ்க்கை வருமா? இப்படி நாளாந்தம் வெளிவரும் மக்களின் குரல்கள் ஏராளம்.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வருவதும், அரசிடமிருந்து காத்திரமான செய்தி எதுவும் இல்லாமல் வன்னிவருவதும், வெறுங்கையோடு திரும்புவதும் இன்று வாடிக்கையாகிவிட்டது. இன்று சமாதானம் குறித்து அனைவரும் விரக்தி அடைந்துள்ளனர். சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தத்தைக் கொடுப்பதன் மூலம், புதிய வழிபிறக்க வாய்ப்புண்டு. திலீபனின் தியாகமோ வித்தியா சமானது. வியக்கத்தக்கது. எமது போரட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டத்தில் தன்னைப் பலிகொடுத்த ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான்.

அவனது மரணம் ஒரு வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழ தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி. பாரதநாட்டைத் தலைகுனிய வைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியை சீண்டி விட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன்? ஒரு மகத்தான நிகழ்ச்சியாக மக்கள் அனைவரையும் எழுச்சி கொள்ளச் செய்த புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந் தது.

திலீபன் தமிழ் மக்களுக்காக இறந்தான்! அவர்களின் உரிமைக்காக இறந்தான். தமிழ் மண்ணுக்காக இறந்தான். தமிழரின் பாதுகாப்புக்காக, சுதந்திரத்துக்காக, கௌரவத்துக்காக இறந்தான். தான் நேசித்த மக்களுக்காக, தான்நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உள்ளத் தியாகத்தைச் செய்ய முடியுமோ? அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருந்தான்.

தமிழீழ அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்லமுடியாது, அகதி முகாமுக்குள் முடங்கிக்கிடக்க சிங்கள குடியேற்றம் துரிதகதியில் தமிழ் மண்ணைக் கபளீகரம் செய்தது. சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது.

அவசர, அவசரமாகச் சிங்கள இனவாத அரச இயந்திரம் தமிழ்ப்பகுதிகளில் ஊடுருவியது. சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் இந்தியப் படையின் அனுசரணையுடன் சிங்கள அரசின் ஆதிக்கம் தமிழீழத்தில் நிலைகொள்ளமுயன்றது.

இந்தப் போராட்டத்தை உணர்ந்து கொண்ட திலீபன் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கத் திடசங்கற்பம் கொண்டான். சிங்கள அரசுடன் உரிமை கோரிப்போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம்தான் எமது இனப்பிரச்சினையில் தலையிட்டது. எமது உரிமைக்கு உத்தரவாதமளித்தது. எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. எமது ஆயுதபோராட்டத்தை நிறுத்தி வைத்தது.

இந்திய வல்லாதிக்க சக்தியோடு கூட்டுச் சேர்ந்து, விடுதலைப் போராட்டத்தை நசுக்க சிங்கள ஆட்சியாளர் முனைவதைத் திலீபனால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்டிருந்த தமிழர் தாயகம் தன் வாழ்வியல் ஆதாரங்கள் அனைத்தையும் பறிகொடுத்திருந்த காலகட்டத்தில்தான் ஜே.ஆரின் பொறிக்குள் அகப்பட்ட ராஜீவ்காந்தி அமைதிப்படை என்ற போர்வையில் இந்திய இராணுவத்தை 1987ஆம் ஆண்டு ஜுலை 29ஆம் திகதி அனுப்பினார். அதன் வருகையின் பின் இலங்கையின் இனப்பிணக்கு மேலும் சிக்கலானது.

இந்தியா நமது நேசநாடு. தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உற்ற துணையாகவிருக்கும் என நம்பியவர் வாழ்வில் இடிவிழுந்தது. இந்தியா மீது அதீத நம்பிக்கையுடையவர்கள் கூட இறுதியில் வெட்கித் தலைகுனிந்தனர். அந்த அளவு இந்திய இராணுவத்தின் கொடூரமும், கொலையும் இந்த மண்ணில் மலிந்திருந்தன. இந்தக் காட்சிகளைக் காணத் திலீபன் இருக்கவில்லை. ஆனாலும், அவனது ஆன்மா இதனைக் கண்டிருக்கும்.

இந்திய இராணுவத்தின் வருகை துரோகம் நிறைந்தது, உள்நோக்கமுடையது என்பதைத் திலீபன் புரிந்துகொண்டான். அதனால்தான் அவர்களுடைய செயல்பாட்டுக்குக் கால அவகாசம் கொடுக்கவில்லை. இந்த மாபெரும் வல்லாதிக்க சக்தியை எதிர்த்து நீர் கூட அருந்தாது சாகும்வரை வயிற்றிலே போர் தொடுத்தான்.

தமிழ் மக்களின் நியாய பூர்வமான விடுதலைப் போராட்டத்தை, இந்தியா அன்று நசுக்கியது. அதன் விளைவுகளை நம் கண் முன்னே அனுபவித்தார்கள். எமது புனிதமான போராட்டத்தை அன்று புரிந்துகொள்ளாமல், இனவெறி ஆட்சியாளர்களுக்குத் துணை போனார்கள். தங்கள் தவறைப் புரிந்து கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்கவேண்டுமெனப் பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துவருவது குறித்து, இந்தியா கவனம் செலுத்த வேண்டும்.

(தொடரும்)

அரையிறுதியில் தோற்றதன் மூலம்

# மினி உலகக் கிண்ண தொடரிலிருந்து பாகிஸ்தான் அணி வெளியேறியது!

இங்கிலாந்தின் ரோஸ்பவுல் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற மினி உலகக் கிண்ணப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான அரையிறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் 7 விக்கெட்டுக்களால் பாகிஸ்தானைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் இன்ஸமாம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதன்படி அவ்வணியின் யாசீர் ஹமீத், சல்மான் பட், இருவரும் ஆரம்ப வீரர்களாக களம் இறங்கினர்.

பாகிஸ்தான் அணிக்கு முதலாவது ஓவரே நன்றாக அமையவில்லை. அது தனது முதலாவது விக்கெட்டை முதலாவது ஓவரின் இரண்டாவது பந்து வீச்சில் இழந்தது. இதில் சல்மான் பட் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டம் இழந்தார்.

ஆரம்பத்தில் இருந்து பாகிஸ்தானின் இறுதி விக்கெட் வீழ்த்தப்படும் வரை மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சாளர்கள் மிகவும் சிறப்பான முறையில் தமது பந்து வீச்சை மேற்கொண்டனர்.

அடுத்து யாசீர் ஹமீத்துடன் இணைந்தவர் சொகைப் மலிக். இவர்கள் இருவரும் கூட தமது ஆட்டத்தை வெளிப்படுத்தவே இல்லை. இதில் சொகைப் மலிக் 58 பந்துகளில் ஒரு பவுண்டரி அடங்கலாக 17 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் பாகிஸ்தான் விக்கெட்டுக்கள் அனைத்தும் மேற்கிந்திய பந்துவீச்சாளர்களால் அடுத்தடுத்து குறைந்த ஓட்டங்களுடன் [illegible]த்தப்பட்டது. இறுதியில் 38.2 ஓவரில் பாகிஸ்தானின் அனைத்து விக்கெட்டுக்களும் வீழ்த்தப்பட்டு அவ்வணி 131 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இவ்வணி சார்பாக யாசீர் ஹமீத் 39, சொகைப் மலிக் 17, இன்ஸமாம் 21, யுகானா 12, அப்ரிடி 17 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்ற அதேவேளை சல்மான் பட், மொயின் கான், நவீட் உல்ஹசன் மற்றும் மொகமட் சமி ஆகிய நால்வரும் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.





பந்து வீச்சில் கொலிமோர், பிராவோ, ஹின்ட்ஸ் மூவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் பிராட்சோ, கைல் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன் பின் 132 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற மிகச் சிறிய இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியின் ஆரம்ப வீரர்களான கைல் 1, ஹின்ஸ் 5 இருவரும் மிகக் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த போதிலும் அடுத்து வந்த சர்வான், லாரா இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

இதில் லாரா 30 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 31 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அக்தரின் பவுன்சர் பந்து வீச்சில் கழுத்துப் பகுதியில் பந்து பட்டதால் ஏற்பட் காயத்தை அடுத்து தொடர்ந்து ஆடமுடியாத காரணத்தால் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

இதன்பின் சந்திரபோல் 11 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இறுதிவரை ஆட்டமிழக்காமல் சர்வான் 56 ஓட்டங்களையும் பவல் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

28.1 ஓவர்களில் மேற்கிந்திய தீவுகள் 3 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 132 ஓட்டங்களைப் பெற்று பாகிஸ்தான் அணியை ஏழு விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

பந்து வீச்சில் அக்தர் 2, சொகைப் மலிக் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நாளை மறுதினம் ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் இறுதிப் போட்டி நடைபெறும்.

# இங்கிலாந்துடனான தோல்வி ஏமாற்றத்தை அளித்துள்ளதாம்

## ரிக்கி பொன்டிங் தெரிவிப்பு

ஐ.சி.சிசம்பியன் டிராபி கிரிக்கெட் போட்டியின் முதல் அரையிறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் இங்கிலாந்து அவுஸ்ரேலிய அணிகள் மோதின.

உலக சம்பியனான அவுஸ்ரேலியா இதில் அதிர்ச்சிகரமாகத் தோற்றது. இங்கிலாந்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. தோல்வி குறித்து அவுஸ்ரேலிய கபடன் பொன்டிங் கூறியதாவது-

வெற்றிபெற்ற இங்கிலாந்தைப் பாராட்டுகிறேன். அனைத்து வகையிலும் அந்த அணி வீரர்கள் சிறப்பரக ஆடினர். இந்தத் தோல்வி சிறிய ஏமாற்றத்தை அளிக்கிறது. ஐ.சி.சி போட்டியில் இறுதி ஆட்டம்வரை மீண்டும் தகுதி பெறாமல்போனது ஏமாற்றம் அளிக்கிறது.

இறுதிப் போட்டியிலும் இங்கிலாந்து அணி சிறப்பாக விளையாடும் என்று நம்புகிறேன்.

அவுஸ்ரேலிய வீரர்களின் ஆட்டம் மோசமாக இருந்தது. பந்துவீச்சு சரியில்லை. துடுப்பாட்டமும் சுமாராகவே இருந்தது. முக்கிய கட்டத்தில் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து விழுந்தன. இன்னும் கூடுதலாக 30 ஓட்டங்கள் எடுத்திருந்தால் ஆட்டத்தின் முடிவு மாறியிருக்கும் என்று பொன்டிங் கூறினார்.



வெற்றி குறித்து இங்கிலாந்து கப்டன் கூறியதாவது -

நீண்ட நாட்களுக்குப் பிறகு அவுஸ்ரேலியாவை வென்றது மகிழ்ச்சியை அளிக்கிறது. வீரர்களின் கூட்டுமுயற்சியே வெற்றிக்கு காரணம். இறுதிப்போட்டியைச் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். இறுதிப்போட்டியில் சிறப்பாக ஆடுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது எனத் தெரிவித்தார்.

# எலும்பு மூட்டு சிகிச்சையே டெண்டுல்கருக்கு சிறந்தது

## மும்பை டொக்டர் தெரிவிப்பு

(மும்பை)



உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராகத் திகழ்பவர் சச்சின் டெண்டுல்கர். இடது முழங்கையில் ஏற்பட்டுள்ள காயத்தால் அவர் அவதிப்பட்டு வருகிறார்.

இந்த நிலையில் டெண்டுல்கருக்கு நவீன எலும்பு மூட்டு சிகிச்சையே சிறந்தது என்று மும்பை டொக்டர் முராரிமோடி கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

டெண்டுல்கருக்கு கையில் காயம் ஏற்பட்டுள்ளது. இதற்காக அவருக்கு இங்கிலாந்தில் 'ஷொக்' சிகிச்சை முறை அளிக்கப்படுகிறது. இதில் தற்காலிகமாக நிவாரணம் கிடைக்கும் விளையாட ஆரம்பிக்கும்போது, மீண்டும் வலி ஏற்படும்.

இதற்கு நிரந்தரத் தீர்வுகாண நவீன எலும்பு மூட்டு சிகிச்சையே (ஆஸ்டியோபதி) சிறந்தது. இந்த நவீன எலும்பு மூட்டு சிகிச்சை மூலம் டெண்டுல்கர் மீண்டும் பழைய நிலையை எட்ட முடியும்.

முன்னாள் கப்டன் வெங்சர்க்கார் முதுகு வலியால் அவதிப்பட்டார். அவருக்கு இந்த சிகிச்சைமுறை அளிக்கப்பட்டு குணமடைந்தார்.

இவ்வாறு முராரிமோடி கூறினார். தனக்கு நவீன எலும்பு மூட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதை துலீப் வெங்சர்க்கார் ஒப்புக்கொண்டார்.

## வலுவிழந்தோருக்கான ஒலிம்பிக் - 2004 பதக்கப் பட்டியல்

*ஏதென்ஸ் நகரில் நடைபெற்றுவரும் வலுவிழந்தோருக்கான ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்ற நாடுகள் விபரம் :*

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 21 | 23 | 17 | 61 |
| பிரித்தானியா | 15 | 09 | 11 | 35 |
| பிரான்ஸ் | 10 | 11 | 10 | 31 |
| ஜேர்மனி | 09 | 11 | 17 | 37 |
| ஸ்பெயின் | 09 | 10 | 10 | 29 |
| உக்ரேயின் | 09 | 05 | 07 | 21 |
| அவுஸ்ரேலியா | 08 | 11 | 10 | 29 |
| ஹொங்கொங் | 07 | 05 | 01 | 13 |
| கனடா | 07 | 03 | 02 | 12 |
| ஐக்கிய அமெரிக்கா | 06 | 08 | 14 | 28 |
| செக்குடியரசு | 06 | 06 | 05 | 17 |
| ஜப்பான் | 06 | 05 | 05 | 16 |
| பிரேசில் | 06 | 04 | 02 | 12 |
| போலந்து | 05 | 07 | 07 | 19 |
| தென்னாபிரிக்கா | 05 | 05 | 01 | 11 |
| மெக்ஸிக்கோ | 05 | 01 | 03 | 09 |
| ரஷ்யா | 04 | 01 | 09 | 14 |
| அல்ஜீரியா | 04 | 00 | 04 | 08 |
| கொரியா | 03 | 06 | 02 | 11 |
| பெலாரஸ் | 03 | 05 | 01 | 09 |
| ருனீசியா | 03 | 02 | 01 | 06 |
| ஸ்லோவாக்கியா | 03 | 02 | 01 | 06 |
| ஒஸ்ரியா | 02 | 03 | 01 | 06 |
| சுவீடன் | 02 | 02 | 02 | 06 |
| எகிப்து | 02 | 02 | 01 | 05 |
| கியூபா | 02 | 01 | 03 | 06 |
| பின்லாந்து | 02 | 01 | 01 | 04 |
| ஈரான் | 02 | 00 | 06 | 08 |
| அசர்பைசான் | 02 | 00 | 01 | 03 |
| கிரீஸ் | 01 | 04 | 02 | 07 |
| டென்மார்க் | 01 | 03 | 03 | 07 |
| இத்தாலி | 01 | 02 | 04 | 07 |
| தாய்லாந்து | 01 | 02 | 03 | 06 |
| நைஜீரியா | 01 | 02 | 01 | 04 |
| இஸ்ரேல் | 01 | 01 | 02 | 04 |
| ஸ்லோவேனியா | 01 | 01 | 01 | 03 |
| பெல்ஜியம் | 01 | 01 | 00 | 02 |
| லத்வியா | 01 | 01 | 00 | 02 |
| கென்யா | 01 | 00 | 01 | 02 |
| நியூஸிலாந்து | 01 | 00 | 01 | 02 |
| இந்தியா | 01 | 00 | 00 | 01 |
| துருக்கி | 01 | 00 | 00 | 01 |





ரெனிஸ் போட்டியில் தங்கம் வென்ற பிரிட்டனின் ஜயந்த மிஸ்றி



துட்டெறிதலில் 33.53 மற்றர் தூரம் எறிந்து உலக சாதனை படைத்து தங்கம் வென்ற ஸ்ரீபன் மில்லர்





நடைபெற்றுவரும் வலுவிழந்தோருக்கான ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான 100 மீற்றர் பின்புற நீச்சல் போட்டியில் நைறிலெவிஸ் 1 நிமிடம் 32 செக்கனில் கடந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

வலுவிழந்தோருக்கான ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான 100 மீற்றர் பின்புற நீச்சல் போட்டியில் பிரிட்டனைச் சேர்ந்த டேவ் றொபேட்ஸ் தங்கப் பதக்கம் வென்றார்,

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

அதிகரித்த விலைக்கு பாண்

# விற்கும் வர்த்தகர்கள் குறித்து தகவல் தருமாறு கோரிக்கை!

யாழ். குடாநாட்டில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாகப் பாண் விற்பனை செய்பவர்கள் குறித்து தமக்கு அறிவிக்குமாறு யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் கோரியுள்ளது.

450 கிராம் பாண் ஒன்றை 19 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு யாழ். குடாநாட்டு பேக்கரி உரிமையாளர் சங்கமும், விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியும் தீர்மானித்தது.

எனினும் இந்த விலை பற்றிய அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர் யாழ. குடாநாட்டில் தரமற்ற முறையில் உற்பத்திசெய்யப்படும் பாண்கள் கொள்வனவு விலையில் விற்பனை செய்வதாகக் கூறப்பட்டது.

தற்போது யாழ். குடாநாட்டில் 325 கிராம் பாண் விலை 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாகப் புகார்கள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாட்டையடுத்து யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கமும், விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு தரமற்ற முறையில் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் பற்றி 021 222 7594, 021 228 5003 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

## கொரிய நாட்டுத் தூதர் நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்!



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலும் இலங்கைத் தீவிலும் மிக விரைவில் நிரந்தர சமாதானம் நிலவும் எனத் தமக்கு நம்பிக்கை இருப்பதாக கொரிய நாட்டின் தூதுவர் விம் ஜெ. கொங் தெரிவித்தார்.

நேற்றைய தினம் கொரிய நாட்டின் தூதுவர் விம் ஜெ.கொங் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி கிம் டைங் குவாங் ஆகியோர் அடங்கிய நான்கு பேரைக் கொண்ட குழு ஒன்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தது.

இவர்களை வரவேற்கும் வைபவம் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெற்றபோது, அங்கு உரையாற்றுகையிலேயே கொரியத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், நான் யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்தமை இதுதான் முதற்தடவையாகும். தமிழ் கலாசாரம் என்னைக் கவர்ந்துள்ளது. எனக்கு அரச மரியாதை வழங்கப்பட்டதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கொரிய நாட்டின் நிதியுதவியுடன் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. குறிப்பாக, இந்த நவீன திட்டம் இளம் சந்ததியினரை முன்னேற்றுவதாக அமைய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - உயர்தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் கருத்துத் தெரிவிக்கையில், யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனமாகத் தரம் உயர்த்தும் வேலைகள் ஆரம்பிக்கவுள்ளது. மண்டபத்தை நான்காகப் பிரித்து தொழில்நுட்ப இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளன. தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 10 புதிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

## சுமுகமாக நடைபெற்று...

தியட்சகர் வசந்த ரத்னாயக்க, மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீரக்கெல மற்றும் பொலிஸ் அதிகாரி ஜமால்தீன், விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த டி.சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலை 10.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை இடம்பெற்ற இச்சந்திபபில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற போர்நிறுத்தமீறல் சம்பவங்கள் குறித்தும், பரஸ்பர இரு தரப்பு சந்திப்புக்களை மீண்டும் தொடர்வது குறித்தும் ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பின் பின்பு படைத்தரப்பிலிருந்து செய்தியாளர்களுக்கு எத்தகைய கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை. எனினும் இரு தரப்பும் இணைந்து கூட்டு அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது -

இந்தச் சந்திப்பில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகக் கூறிய அவர், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமது பணிகள் தொடர்பாக பல உத்தரவாதங்கள் தரப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

அண்மைக்காலப் போர்நிறுத்த மீறல்கள் குறித்து எதுவும் பேசப்படவில்லை என்று கூறிய அவர், அந்த மீறல்கள் தொடர்பாக உரிய நேரத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாகப் படைத்தரப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

அண்மைக் காலமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சந்திப்பை இன்று ஆரம்பித்துள்ளோம். இந்தச் சந்திப்பை ஏற்படுத்துவதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்புத் தலைமையகம் ஏற்பாடுசெய்தது.

இந்தச் சந்திப்பினூடாக வழமை போன்று அரசியல் வேலைத்திட்டத்தை செய்வதுதான் எங்களது நோக்கம். கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கு ஓரளவு நம்பிக்கை தரக்கூடிய தீர்மானங்களை எடுத்துள்ளோம். அதற்கேற்றவாறு எமது வழமையான வேலைத்திட்டங்கள் நடைபெற்றுவரும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறுகின்ற எங்களுடைய அனைத்துப் பணிகளுக்கும் முழுமையான பங்களிப்பு இதற்கு முன்பு இருந்ததுபோன்று இருக்கும் என்பதை படைத்தரப்பினர் எங்களுக்கு ஆணித்தரமாகவும் உறுதியாகவும் கூறியிருக்கின்றனர்.

அதற்கேற்றவாறு நாங்கள் எங்களது வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவிருக்கிறோம். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் எமது மட்டு - அம்பாறை மாவட்டத்தில் எங்களுடைய இந்த ஒன்றுகூடலினூடாக மக்கள் ஒரு நல்ல மனநிறைவை அடைவார்கள் என்பதை நாங்கள் அவர்களுக்குக் கூறியிருக்கிறோம்.

இந்த மாவட்டம் மூவின மக்களும் வாழும் பிரதேசமாகும். எனவே மக்கள் அவர்களின் அன்றாடப் பணிகளை எவ்வித பிரச்சினையும் இன்றி செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கமாகும்.

அதனைத்தான் நாங்கள் படைத்தரப்பினருக்குக் கூறியிருக்கிறோம். அதனை அவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த விடயங்கள் இன்றைய சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களாகும்.

போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பேணுவதற்கும் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் இவ்வாறான பேச்சுவார்த்தைகளை நம்பிக்கையோடு முன்னெடுத்துச் செல்கிறோம்.

இதுதான் எமது தலைமைப்பீடத்தின் கருத்தாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டார். இதேவேளை இந்தச் சந்திப்பு இடம்பெற்ற வவுணதீவு பிரதேச செயலக சூழலில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகள், இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் என சந்திப்பு இடம்பெற்ற பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இடைக்கால நிர்வாகம் குறித்து

## பி.பி.சி. சிங்களசேவை கருத்துக் கணிப்பு!

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமா என்ற கருத்துக் கணிப்பொன்றை பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசிய இணையத் தளம் நடத்திவருகிறது.

இடைக்கால நிர்வாகத்தின் அடிபபடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதை இணையத் தளவாசகர்கள் ஆதரிக்கிறார்களா என்பதை அறிவதே கருத்துக் கணிப்பிற்கான நோக்கமாக உள்ளது. இந்தக் கேள்விக்கு ஆம் அல்லது இல்லையென்ற பதிலை அதற்குரிய ஆளியை அழுத்துவதன் மூலம வழங்க முடியும்.

இந்த வாக்கெடுப்பில் பங்கு பற்ற விரும்பும் வாசகர்கள் B.B.C. Sinhala என்ற முகவரிக்கு வாக்களிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை அளிக்கப்பட்ட வாக்களிப்பு முடிவின்படி, 2538 பேர் (59.6 வீதம்) ஆதரவாகவும், 1768 பேர் (40.4 வீதம்) எதிராகவும் வாக்களித்திருந்தனர்.

## சந்திரிகாவின்....

போன்றதான தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதி சர்வதேச சமூகத்தின் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த 18 மாத காலமாக பேச்சுவார்த்தை ஒன்றுக்கு வராமல் இருப்பதாக கூறியுள்ளார் இது சர்வதேச ரீதியில் அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக பொய்க குற்றச்சாட்டை சுமத்தி அவர்களுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இந்தியாவின் உதவியைப் பெறுவதற்கு முனைவதையே எடுத்துக்காட்டுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் எப்போதும் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு தயாராக இருக்கின்ற போதும் அரசாங்கமே பேச்சுவார்த்தைக்கு இழுத்தடிப்புச் செய்துவருகிறது. இந்த நிலையில் தமிழ்மக்கள் மீது யுத்தம் ஒன்று திணிக்கப்படுமானால் அதனை எதிர்கொள்ள தமிழ் மக்களும் தயார் எனவும் சிவாஜிலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

## விசர்நாய்....

சிகிச்சை பலனளிக்காத நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் உடல் மருத்துவ பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## 'போர் நடந்த மண்ணில்' நூல் வெளியீட்டு விழா!

புலிகளின் குரல் நிறுவனத்தின் போர் நடந்த மண்ணில் நூல் வெளியீட்டுவிழா இன்று மாலை 4 மணிக்கு வீரசிங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கேணல் கிட்டு நினைவுப் போட்டிக்கான வெற்றி ஆக்கங்களும் வானோசையின் வெற்றி ஆக்கங்களும் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இத்துடன் - இந்த வெளியீட்டு விழாவில் - நூல் வெளியீடு, சிறப்புரைகள், மதிப்பீட்டு உரைகள் போன்ற அம்சங்களுடன் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

போராளி மலைமகள், போராளி தூயவன், போராளி அரும்பொருள், போராளி யோகன், யோ.கருணன் ஆகியோரது சிறுகதைகளும், தனுஷியா, மகேந்திரன் போராளி யாழ் வீரன்/ஊரவன் போராளி ரகுபதி, போராளி கவியழகன், ஆகியோரின் கவிதைகளும், மலரன்னை, ஆவரங்கால் சுதன், பிரஞ்ஞன், போராளி கை.சரவணன் ஆகியோர்களின் நாடகங்களும் போராளி பழனி, போராளி செந்தோழன், போராளி செங்கையன் ஆகியோரின் ஒளிப்பாடல்களும் போராளி நீதன், காங்கேசன், பயஸ் ராஜா ஆகியோரின் ஓவியங்களும் போராளி புரட்சி, யாழ்வீரன் போராளி கலையழகன் ஆகியோரின் கட்டுரைகளையும் தாங்கி இந்த நூல் வெளிவருகின்றது.

## காணாமற்....

மனுவை நிராகரிக்குமாறு கோரினார்.

இதற்குப் பதிலளித்த நீதியரசர் இராஜா பெர்னாண்டோ - யுத்த சூழ்நிலையில் பல குறைபாடுகள் இருந்திருக்கலாம். ஆனால், அதற்காக இந்தக் குறிப்பிட்ட சம்பவங்கள் உண்மையல்ல எனக் கருதமுடியாது எனக் கூறி அரச சட்டவாதியின் கோரிக்கையை நிராகரித்தார்.

அடிப்படை மனித உரிமை மீறல்கள் சட்டபூர்வமாக இருந்தாலும், இராணுவத்தினால் கைதாகி காணாமற்போனோருக்கான பொறுப்பை அரசாங்கம்தான் ஏற்கவேண்டும் என நீதிமன்றம் சுட்டிக்காட்டி, பிரதிவாதிகளான திருகோணமலை பிளான்டன பொயின்ட் இராணுவ கட்டளை அதிகாரியை எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னதாக பதில் மனுத் தாக்கல் செய்ய அவகாசம் வழங்கி விசாரணையை ஒத்திவைத்தார்.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானம் இலங்கை நீதித்துறை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஏற்கனவே இப்படித் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளுக்கு இந்தத் தீர்மானம் சாதகமானதாக அமையலாம் என்று கருதப்படுகிறது.

## அடுத்த சில தினங்கள் கடும் மழை பெய்யும்!

(கொழும்பு)

இலங்கையின் பல பகுதிகளில் அடுத்த சில தினங்களில் கடும் மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாக இலங்கை வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் கடும் மழையால் வெள்ளப் பெருக்கு, மண்சரிவு முதலான அனர்த்தங்கள் ஏற்படவும் சாத்தியம் தென்படுவதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுமாறும் வேண்டப்பட்டுள்ளனர்.

## புலிகள்.....

விடுதலைப் புலிகள் கோருகின்றனர்.

இந்தப் பிரச்சினையை போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் தீர்க்க வேண்டும் என்ற போதும், இலங்கையின் சுயாதீனமான நீதிமன்ற முறையை மீறிக் குறிப்பிட்ட போராளிகளையும் விடுவிக்கமுடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கோருகின்ற அனைத்தையும் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை என்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

### தேசிய லொத்தர் சபை — மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல:- 1650 திகதி:- 21.09.2004

வெற்றி இலக்கங்கள்

E 9 7 1 0 3 7

அடுத்த சூப்பர் பரிசு 293 லட்சத்துக்கு மேல் (927)






இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.